Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu | youtube.com/nimirvu | www.nimirvu.org

பார்வை – 46 | ஆனி, ஆடி 2021 | பக்கங்கள் – 24 | விலை – ரூபா 20.00




## உய்குர்களை கைவிடும் முஸ்லிம் நாடுகள்



சீனாவை எப்படி எதிர்கொள்ள வேண்டும்?



முள்ளிவாய்க்கால் ஓர் இடத்தின் பெயர் அல்ல
அது ஒரு குற்றத்தின் பெயர்



மனச்சாட்சியால் கைதியானவன்

**- ஆராயும் அறிவே நிமிர்வு -**

# மரக்கறி நாற்றுகள் உற்பத்தியில் இளம்பெண் முயற்சியாளர்





மரக்கறி நாற்றுகள், மரக் கன்றுகள், பூங்கன்றுகள், மூலிகைக் கன்றுகளை இயற்கை முறையில் திறம்பட வளர்த்து வருகிறார் செந்தமிழ்ராசா சுபாங்கனி (யது) என்கிற 19 வயதேயான இளம்பெண். யாழ்ப்பாணம் – கொக்குவில் பொற்பதி வீதியை அண்மித்த பகுதியில் தான் இவரது சிறிய தாவரப் பண்ணை அமைந்துள்ளது.

அவரது வீட்டின் அருகே உள்ள கால் பரப்பும் இல்லாத மிகச் சிறிய காணித்துண்டில் மேற்படி தாவர உற்பத்திகளை வெற்றிகரமாக செய்வதோடு மட்டுமல்லாமல் விற்பனையும் செய்து வருகிறார்.

இவர் இப்படியான சிறிய இயற்கை சார்ந்த தொழில் முயற்சிகளை மேற்கொள்ள காரணம் இயற்கை வழி இயக்கமெனும் அமைப்பே ஆகும். ஆரம்பத்தில் குறித்த அமைப்புடன் பயணித்த காரணத்தால் பல்வேறு பண்ணைப் பயணங்களையும், அதன் மூலமான அனுபவங்களையும் பெற்று இப்படியான ஒரு முயற்சியாண்மையில் இறங்கி வெற்றியும் கண்டிருக்கிறார்.

இந்த தாவர உற்பத்திகளை ஆரம்பத்தில் பொழுதுபோக்குக்காக செய்து வந்த அவர் திருமணமான பின்னர் சிறிய வருமானம் தரும் தொழிலாகவும் அதனை மாற்றியுள்ளார். அவர் கூறியவற்றை இங்கே தொகுத்திருக்கிறோம்.

கத்தரி, மிளகாய், வெண்டி போன்ற மரக்கறிகளை நாற்றாகத் தான் முதலில் உற்பத்தி செய்து கொடுத்து வந்தேன். பின்னர் சிறு சிறு பைகளில் தனித்தனி மரக்கறி நாற்றுகளை நாட்டி அவை சற்று வளர்ந்ததும் விற்பனை செய்து வருகிறேன்.

**தொகுப்பு – துருவன்**

கற்பூரவள்ளி, தூதுவளை, சிறுகுறிஞ்சா, மொசுமொசுக்கை, முடக்கொத்தான் ஆகிய மூலிகைக் கன்றுகளையும் வளர்த்து வருகின்றேன். கொரோனா காலமாகையால் இவற்றுக்கு மக்கள் மத்தியில் அதிகரித்த கேள்வி உண்டு. நாடு முடக்கப்பட்டிருந்த நேரத்தில் பொதுமக்களிடம் மரக்கறிக் கன்றுகளுக்கும் அதிகரித்த கேள்வி இருந்தது.

இங்கே மரக்கறிகன்றுகள் வாங்க வருபவர்கள் தக்காளி, வெண்டி, கத்தரி நாற்றுகளைத் தான் அதிகம் வாங்குகிறார்கள். செயற்கை கிருமிநாசினிகள், உரங்களை பாவிக்காதபடியினால் என்னிடம் பலரும் கன்றுகளை விரும்பி வாங்குகின்றனர். இதுவரை இயற்கைப் பசளைகளை பயன்படுத்தி 2000 பொதிகளுக்கு மேலே மரக்கறிக் கன்றுகளை உருவாக்கி விற்பனை செய்திருக்கிறேன்.

மழை காலங்களில் கொக்குவிலில் உள்ள குளம் பெருக்கெடுப்பதாலும், வெள்ளம் வழிந்தோட இடமில்லாத காரணத்தினாலும் எமது வீடு மூழ்கு மளவுக்கு கடந்த முறை வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருந்தது. அதன் போது நான் ஆரம்பத்தில் உருவாக்கியிருந்த கன்றுகள் எல்லாம் நீரில் மூழ்கி அழிவை சந்தித்து இருந்தன. அழிவை சந்தித்திருந்தாலும் எனது முயற்சிகளை தொடர்ந்து வருகிறேன். எனது முயற்சிகளுக்கு எனது கணவரும் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகிறார். அவரும் சேர்ந்து எனது வீட்டுத் தோட்ட முயற்சிகளுக்கு ஆதரவளிக்கிறார். உண்மையில் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் இந்தப் பண்ணையை நடாத்தி வருகின்றேன்

# “எமது பிரதேசங்களை பொறுத்தவரையில் எல்லா வீடுகளிலும் பயன்படுத்தாத சிறு துண்டு காணியாவது இருக்கும். அங்கே இயற்கை முறையில் சேரும் தாவரக் கழிவுகளை பயன்படுத்தி வீட்டு தோட்டத்தினை உருவாக்க முடியும்”

ஏற்கனவே “தாரா வளர்ப்பில் சாதிக்கும் ஸ்ராலினி” எனும் தலைப்பில் நிமிர்வில் கட்டுரை வெளியிட்டிருந்தோம். இப்போது அவர் ஆடு வளர்ப்பு, இயற்கை விவசாயம் எனப் பல துறைகளிலும் மிளிர்ந்து வருகிறார். ஸ்ராலினியை முன்மாதிரியாக கொண்டே யது என்ற இந்தப் பெண்மணியும் உருவாகி இருக்கிறார்.

ஸ்ராலினி யது பற்றிப் பேசிய பொழுது, இவர் இயற்கை வழி இயக்க பயணங்களிலும் பங்கு பற்றியதோடு பல்வேறு கண்காட்சிகளிலும் இயற்கை வழி இயக்கத்தின் சார்பில் பங்குபற்றி அர்ப்பணிப்புடன் செயலாற்றி உள்ளார். கண்காட்சிக்கு வரும் மக்களிடம் இயற்கை வழி விவசாயம் தொடர்பில் பல்வேறு விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தி இருந்தார். பின் எனது சீருயிர் பண்ணையிலும் சேர்ந்து பல்வேறு பணிகளையும் செய்திருந்தார். இயற்கை விவசாயம் சார்ந்த பல்வேறு பயிற்சி வகுப்புகளிலும் பங்கேற்று இருந்தார். அப்போது சொல்லியிருந்தார் எனது பண்ணை மாதிரியான ஒரு அமைப்பை தானும் விரைவில் உருவாக்குவேன் என்று. அதே போல் இப்போது செய்து காட்டியும் இருக்கிறார். இவரைப் போல் வீட்டில் படிப்பை முடித்து விட்டு இருக்கும் பெண்கள் சிறிதாக வீட்டு தோட்டத்தை ஆரம்பித்து பின்பு அதனை வருமானம் தரும் சிறு தொழில் முயற்சியாகவும் மாற்றலாம். இதன் மூலம் இயற்கையாக மரக்கறிக் கன்றுகளை உற்பத்தி செய்வதனூடாக நஞ்சற்ற மரக்கறிகளை பெற்றுக் கொள்ளலாம். அதன் மூலம் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும்.

இந்தப் பெண்மணி தன்னுடைய முயற்சிகளை விரிவுபடுத்துவதற்கு இடத்தின் பரப்பளவு கொஞ்சம் சவாலாக இருக்கிறது. ஏனெனில் அண்மையில்



ஏற்பட்ட புரவிப் புயலின் தாக்கத்தின் காரணமாக மூன்று மாதங்களாக குறித்த இந்த பகுதியில் வெள்ளம் வற்றாமல் தேங்கி நின்றது. அதனால் இவர்கள் இன்னொரு இடத்துக்கு இடம்பெயர்ந்து தான் மீளவும் சொந்த வீட்டுக்கு வந்திருக்கிறார்கள். காலம்காலமாக வெள்ளத்தினால் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றார்கள். பண்ணையை மேலும் விரிவாக்க அவருக்கு மேலும் முதலீடுகளும் தேவைப்படுகின்றன என்று ஸ்ராலினி தெரிவித்தார்.

எமது பிரதேசங்களை பொறுத்தவரையில் எல்லா வீடுகளிலும் பயன்படுத்தாத சிறு துண்டு காணியாவது இருக்கும். அங்கே இயற்கை முறையில் சேரும் தாவரக் கழிவுகளை பயன்படுத்தி வீட்டு தோட்டத்தினை உருவாக்க முடியும். பழைய உரப்பைகள், உடைந்த வாளிகள், பாவிக்க முடியாத பாத்திரங்களில் கூட மண்ணை நிரப்பி மரக்கறி கன்றுகளை வளர்க்கலாம். ஆர்வம் மட்டும் இருந்தால் போதுமானது. அழகியதும் பயன்தருவதுமான ஒரு வீட்டு தோட்டத்தை உருவாக்கி விடலாம்.

ஆடி மாதம் 2 ஆம் திகதி குறித்த பெண்ணின் முயற்சிகள் தொடர்பிலான காணொலியொன்றினை நிமிர்வின் காணொலி பக்கத்தில் பதிவேற்றி இருந்தோம். அதனை ஏராளமானோர் பார்வையிட்டனர். அதன் தொடர்ச்சியாக பல்கலைக்கழக மாணவர்கள், சிறுதொழில் முயற்சியாளர்கள் உள்ளிட்ட பலரும் குறித்த பெண்ணின் பண்ணைக்கு சென்று பார்வையிட்டனர். ஏராளமானோர் மரக்கறிக் கன்றுகளையும் வாங்கிச் சென்றமையால் அவருக்கு மேலும் விற்பனை வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. அத்துடன் இயற்கை முறையிலான வீட்டுத்தோட்டம் செய்ய விரும்பும் இளையோருக்கு அதனை எப்படி ஆரம்பிப்பது என்பது தொடர்பிலும் ஆலோசனைகளையும் கூறி வருகிறார். எதிர் காலத்தில் இந்தப் பெண் மிகச்சிறந்த முயற்சியாளராகவும் வெற்றியடைந்த பெண்ணாகவும் நிச்சயம் இருப்பார்.

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

ஆசிரியர் பார்வை

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

# சேடமிழுக்கும் 13 ஆவது திருத்தத்துக்கு வயது 34

இலங்கை இந்திய ஒப்பந்தம் நிறைவேறி ஆடி 29 ஆம் திகதியன்று 34 ஆண்டுகள் ஆகின்றன.

13 ஆவது திருத்தம் என்று கொண்டு வரப்பட்ட மாகாண சபைகள் தமிழ் மக்களுக் கான நிரந்தர அரசியல் தீர்வின் ஆரம்ப புள்ளியாக கூட கொள்ள முடியாது என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆம், இன்று வடக்கு மாகாண பிரதம செயலாளராக சிங்களவர் ஒருவர் நியமிக்கப் பட்டிருக்கிறார். அதற்கு தமிழ்மக்கள் மற்றும் அரசியற் தரப்புகள் தங்கள் பலத்த எதிர்ப்பை தெரிவித்த வண்ணம் உள்ளார்கள்.

மாகாணசபைகளையும், அதிகாரப் பகிர் வையும் கொண்டுவரவே 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டதாக பூச்சாண்டி காட்டப் பட்டாலும் அதனால் எவ்வித முன்னேற்றங்களும் இல்லை என்பது நிதர்சனமாகி வருகின்றது.

ஒரு கையினால் சிறிதளவு அதிகாரங் களை கொடுப்பது போல் கொடுத்து மறுகை யால் உடனடியாக பறித்தெடுப்பது தான் 13 ஆவது திருத்தம்.

ஆளுநர் சட்டவாக்கத் துறையிலும், நிறைவேற்றுத் துறையிலும் ஆதிக்கம் செலுத் தக் கூடிய சூழ்நிலையில் இருக்கின்ற அதிகாரங் கள் அனைத்தும் இவருடைய கைகளில். இதற்கு அப்பால் ஜனாதிபதியின் பிரதிநி தியாக மாகாண சபையில் ஆளுநர் இருப்ப தால் மத்திய அரசின் அதிகாரங்களை கூட ஆளுநரே செயற்படுத்துகின்ற நிலை காணப்படுகின்றது. மாகாண, மத்திய அரசி னுடைய அதிகாரங்கள் ஓர் ஆளுநரின் கைகளில் உள்ள சந்தர்ப்பத்தில் தெரிந் தெடுக்கப்பட்ட மாகாண சபையினால் எதனை யும் சாதிக்க முடியாது என்பது தெளிவுபடுத் தப்படுகின்றது.

அண்மைக்காலங்களாக இந்தியா 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி வாயே திறப் பதில்லை. ஈழத்தமிழர் பிரச்சினைகள் பற்றி பேசாமல் இலங்கைக்குள் எந்த சர்வதேச நாடுகளும் எதுவும் செய்யலாம் என்ற நிலை உள்ளது. இதனைத் தான் இலங்கை அரசும் சொல்லாமல் சொல்கிறது. சீனாவைப் பின் பற்றி இந்தியாவும் அந்நிலைக்கு இறங்கி யுள்ளது.

1987 ஆம் ஆண்டு ஆடிமாதம் 29 ஆம் திகதி அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் முகமாக இலங்கை-இந்திய ஒப்பந்தம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக் கும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்தனாவிற் கும் இடையில் கொழும்பு நகரில் கையெழுத் திடப்பட்டது. இதனை அமுல்படுத்தும் வகை யில் 1987 நவம்பர் 14 இல் இலங்கை நாடாளு மன்றம் 1978 அரசமைப்புச் சட்டத்திற்கு 13 வது திருத்தத்தை அறிவித்து. மாகாண சபை சட்டமூலத்தை அறிமுகப்படுத்தியது.

13 ஆவது திருத்த சட்டம் பயனற்றது மாற்றியமைக்க வேண்டியது என அரச தரப் பினர் அடிக்கடி கருத்துகளை தெரிவித்து வரு கின்றனர். ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் எல்லாவற்றையும் அடகு வைத்து விட்டு எத னையும் பெற்றுக் கொள்ள முடியாது. 13 ஆவது திருத்தம் என்பது தமிழர்களின் நீதியான போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் ஆயுதமாகும். அதனால் எந்தப் பலனும் கிடையாது. எமது அரசியல் தலைவர்கள் 13 ஆவது திருத்தம் என்கிற மாயையில் இருந்து முதலில் வெளியே வர வேண்டும்.

- செ. கிரிசாந் -

# முள்ளிவாய்க்கால் ஓர் இடத்தின் பெயர் அல்ல அது ஒரு குற்றத்தின் பெயர்



**"சிங்கள தேசத்தின் ஓர் உறுப்பினராக, நான் அவமானம், குற்ற உணர்வு மற்றும் வெட்கப்படவேண்டிய தருணம் இது. தமிழ் தேசத்திற்கு எதிரான கொடூரமான குற்றங்களைத் தடுக்க முடியாமல் போன எனது இயலாமை குறித்து வெட்கப்படு கிறேன். சகோதரர்கள் பலரை கைவிட்ட எனது தனிப்பட்ட பொறுப்பை மறுக்கவும் அகற்றவும் முடியாமல் வேதனைப்படு கிறேன். குற்றவாளியாக உணர்கிறேன்"**

**2009 ஆம் ஆண்டில் தமிழர்களின் இனப்படு கொலையின் 12 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு 2021 மே 18 அன்று யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த முள்ளிவாக் கால் நினைவுக் கூட்டத்தில் ரோகித பாஷண அபேவர்தன நிகழ்த்திய உரையின் மொழி பெயர்ப்பு.**

"சிங்கள தேசத்தின் ஓர் உறுப்பினராக, நான் அவமானம், குற்ற உணர்வு மற்றும் வெட்கப்பட வேண்டிய தருணம் இது. தமிழ் தேசத்திற்கு எதிரான கொடூரமான குற்றங்களைத் தடுக்க முடியாமல் போன எனது இயலாமை குறித்து வெட்கப்படுகிறேன். சகோதரர்கள் பலரை கைவிட்ட எனது தனிப்பட்ட பொறுப்பை மறுக்கவும் அகற்றவும் முடியாமல் வேதனைப்படுகிறேன். குற்றவாளியாக உணர்கிறேன்.

ஆனால், முள்ளிவாய்க்காலில் இறந்தவர் களை நினைவுகூரும் இந்நிகழ்வுக்கு அழைக்கும் அளவிற்கு தமிழ் தேசத்தின் எஞ்சியிருக்கும் உறுப் பினர்கள் நம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையைப் பற்றி நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

அன்றைய தினம் முள்ளிவாய்க்காலில் நடந்த இனப்படுகொலையை, 12 ஆண்டுகளுக்குப் பிறகு பதினைந்து நிமிடங்களுக்குள் நான் மறுபரிசீலனை செய்து பிரதிபலிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர் கள். என்னால் முடிந்தளவு முயற்சிக்கிறேன்.

இலங்கையானது தனது "வெட்கமில்லாத வெற்றித் தினத்தை" 2009 முதல் கொழும்பு வீதிகளில்

**தமிழாக்கம் - நிமிர்வு**

கொண்டாடி வருகிறது. கிட்டத்தட்ட 400,000 மக்கள் சுருங்கிவரும் ஒரு நிலத்தில் சிக்கி, மருந்து, உணவு மற்றும் தூக்கத்தை இழந்து, பசியால் வாடிக்கொண்டு, ஆகாயம் நிலம் கடல் ஆகிய எல்லாப் பக்கங் களிலிருந்தும் தாக்குதல்களுக்கு மத்தியில் நடுங்கிக் கொண்டு வாழ்ந்த காலம் அது.

அந்த அவலம் அத்துடன் நிற்கவில்லை

யுத்தமுடிவில் பிழைத்தவர்களை புனர்வாழ்வு முகாம்களுக்கு கொண்டு செல்வதாக கூறப்பட்டது. புனர்வாழ்வு முகாம்கள் "ஒரு நாடு – ஒரு தேசம்" என்பதைக் கட்டி எழுப்புவதற்கான முதற் படி என்றும் சொல்லப்பட்டது. ஆனால் தப்பிப்பிழைத்தவர்களை புனர்வாழ்வு முகாம்களுக்கும் தடுப்பு முகாம்களுக்கும் அழைத்துச் செல்வதற்கு முன்பாக சட்டவிரோதமாக கொல்வது, பெண்களை பாலியல் பலாத்காரம் செய்வது, குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கா னோரைக் காணாமல் போகச் செய்வது குற்றமாகும்.

புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இந்த 'ஒரு நாடு – ஒரு தேசம்' இனவெறியின் உச்சத்தில் இனப்படு கொலை செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட ஒன்று. இந்த 'ஒரு நாடு – ஒரு தேசம்' என்பது இராணுவ பலத்தால் சுதந்திரம் மற்றும் சமத்துவத்திற்கான கோரிக்கையை உடைத்து, பல தலைமுறைகளின் எலும்புகளால் உருவாக்கப்பட்ட எலும்பு மலை.

இந்த கொடூரமான குற்றங்களை நாம் எவ்வாறு அழைக்க வேண்டும்? முள்ளிவாய்க்காலில் 2009 மே மாதத்தின் உச்சக்கட்டத்தை அடைந்த இந்த பாரிய துன்புறுத்தலை நாம் எவ்வாறு வரையறுப்பது? இது இனவழிப்பா? போர்க்குற்றமா? மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களா? அல்லது சர்வதேச குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதப்படும் இனப்படு கொலையா?

ஒருபுறம், இலங்கை அரசும் அதன் சர்வதேச ஆதரவாளர்களும் தமிழ் மக்கள் மட்டும்தான் இந்தக் குற்றத்தை 'இனப்படுகொலை' என்று அழைக்கிறார் கள் என்று சொல்கிறார்கள். இதன்மூலம் தமிழ் மக்கள் உலக பார்வையில் சில சலுகைகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். ஆனால் அது உண்மையா? இனப்படுகொலை என்ற பதம் ஒரு தேசத்தில் தப்பிப்பிழைப்பவர்கள் சலுகை பெற முயற்சிக்கும் நிபந்தனையா?

மறுபுறம், அதிகாரத்தில் இருப்பவர்கள் செய்யும் அட்டூழியங்கள் சர்வதேச சக்திகளால் இனப்படுகொலை என வரையறுக்கப்படவில்லை என்பதால், நடந்த குற்றத்தை தமிழ் தேசம் அதன் உண்மையான பெயரான "இனப்படுகொலை" யில் வலியுறுத்தக்கூடாது என்றும் சொல்கிறார்கள்.

இந்த சிந்தனையின் அடிப்படை குறைபாடு என்னவென்றால், இனப்படுகொலை என்பது உலக சக்திகளால் ஒருமனதாக வாக்களிக்கப்பட வேண்டிய ஒரு தீர்மானம் அல்ல. பல தசாப்தங்களாக தமிழ் தேசத்திற்கு எதிராக செய்யப்பட்டுள்ள ஒரு குற்றத்தை சரியான முறையில் பெயரிட்டு அழைப்பதற்கு அந்த தேசத்துக்கு உரிமையுண்டு. முள்ளிவாய்க்காலுக்கு 12 ஆண்டுகளுக்குப் பிறகும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும், ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் எதிர்கொள்வதை சரியான பெயரிட்டு அழைக்க எந்த ஒரு உலக சக்தியுடனும் ஒரு சமரசம் செய்யத் தேவையில்லை.

இனப்படுகொலை என்ற வார்த்தையை உருவாக்கிய போலந்து அறிஞர் ரஃபேல் லெம்கின் கூறினார்: "இனப்படுகொலை என்பது ஒரு தேசத்தை, அதன் அனைத்து உறுப்பினர்களை உடனடியாக அழிப் பதைக் குறிக்காது. மாறாக, தேசிய இனக் குழுக்களின் வாழ்க்கையின் முக்கிய அத்திவாரங்களை அழிப் பதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு நடவடிக் கைகளை பின்னிப்பிணைக்கும் ஒரு திட்டம் தான் இனப்படுகொலை ஆகும்."

## "தமிழ் தேசத்தின் கூட்டு தேசிய வாழ்க்கையின் முக்கிய அத்திவாரங்களை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பதற்காக ஒரு ஒருங்கிணைந்த மற்றும் அழிவுகரமான செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது"

தமிழ் தேசத்தின் கூட்டுத் தேசிய வாழ்க்கை யின் முக்கிய அத்திவாரங்களை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பதற்காக ஒரு ஒருங் கிணைந்த மற்றும் அழிவுகரமான செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதனை சர்வதேச சக்திகளின் மனங்களில் பதிவு செய்வதன் மூலம் தான் அதனை உறுதிப்படுத்த முடியும் என்பது சரியான நிலைப்பாடு அல்ல.

மாறாக, தமிழ் தேசத்தின் தேசிய அடை யாளத்தை அழிப்பதற்கும், அடக்குமுறை சிங்கள–பௌத்த அடையாளத்தை அவர்கள் மீது திணிப்பதற் கும் மேற்கொள்ளப்படும் வரலாற்று செயல்முறையை ஆராய்வதன் மூலம் இந்த குற்றத்தை உறுதிப்படுத்த முடியும்.


ஆனால் அந்த ஆராய்வு என்பது எனக்கு ஒதுக்கப்பட்ட இந்தக் குறுகிய நேரத்தில் பகுப்பாய்வு செய்து விளக்கப்படக் கூடிய ஒன்று அல்ல.

தமிழர்களின் கூட்டு தேசிய வாழ்வின் முக்கிய அத்திவாரங்களை அழிக்கும் நோக்கில் ஒருங் கிணைக்கப்பட்டிருக்கும் திட்டம் இன்னும் முழுமை யாக ஆராயப்பட்டு அம்பலப்படுத்தப்படவில்லை. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து 21 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை, ஒரு தமிழனாக ஒடுக்கப்பட்டு, அடிமைத்தனத்திற்கு எதிராகப் போராடி, கண்ணியமான ஆண்களாகவும் பெண்களாகவும் வாழ விரும்பும் ஒவ்வொரு உயிருள்ள மனிதனும் நீதிக்காக காத்திருக்கிறான்.

அந்த நீதியை வெல்வதற்கான முதற் படி, உலக சக்திகளின் செல்வாக்கையும் மீறி தனக்கு எதிரான குற்றங்களுக்கு தைரியமாக சரியான பெயரிடுவது.

# ஆசிய அணு அரசியல்

-நிஷா பி சேகர்-
பாதுகாப்பு, சர்வதேச விவகார செய்தியாளர்




ஆவணி 1945 ஆம் ஆண்டு அணு ஆயுதத்தின் கண்டுப்பிடிப்பால் புதிய ஆரம்பம் ஒன்று ஏற்பட்டது. அணுவாயுதங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. ஒரு அணு குண்டு ஒரு முழு நகரத்தையும் அழிக்கக்கூடும். இவை வரலாற்றில் இரண்டு முறை மட்டுமே பயன்படுத் தப்பட்டுள்ளன. ஹிரோஷிமா நகரில் வீசப்பட்ட குண்டிலிருந்து கதிர்வீச்சு பல மாதங்கள் நீடித்தது. மற்றும் 80,000 பேர் கொல்லப்பட்டனர். நாகசாகி மீது வீசப்பட்ட அணு குண்டு 70,000 க்கும் அதிக மான மக்களைக் கொன்றது. அதன் பின்னர் அணு ஆயுதங்கள் போர்களில் பயன்படுத்தப்படவில்லை.

தற்போது ஒன்பது நாடுகளில் அணு ஆயு தங்கள் உள்ளன: அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் வட கொரியா. அணு ஆயுதத்தை ஆதரிக்காத நாடுகளும் உள்ளன. ஜப்பானில் ஏற்பட்ட பேரழிவை பற்றி தெரிந்தவர்களுக்கு அணு ஆயுதம் மீது வெறுப்பு ஏற்பட்டது. உலகளவில் அணு சக்தி மீது எதிர்மறை யான கருத்துக்கள் நிலவியது. ஆனால் 1945 முதல் 1968 வரை அணு ஆயுதங்களின் பெருக்கம் மற்றும் பயன்பாட்டை கட்டுப்படுத்துவது தொடர்பாக எந்த ஒரு உலகளாவிய ஒப்பந்தமும் ஏற்படுத்தப்பட வில்லை. அதனால், பலம் வாய்ந்த நாடுகள் அணு ஆயுதம் மற்றும் ஆராய்ச்சியில் கவனம் செலுத்த ஆரம்பித்தன.

1968 ஆம் ஆண்டு அணுசக்தி பரவல் தடை குழு ஒன்று அணு ஆயுதங்களைக் குறைப்பதற்காக உருவாக்கப்பட்டது. இந்த முயற்சி ஐ.நா சபையால் முன்னெடுக்கப்பட்டது. அதனையடுத்து அணுப் பரம்பற் தடுப்பு உடன்படிக்கை (Non Proliferation Treaty) என்ற பெயர் கொண்ட ஒப்பந்தம் போடப்பட்டது. அணு சக்தி உருவாக்கம் மற்றும் அதன் பயன்பாட்டை கட்டுப்படுத்தவும் கண்காணிக்கவும் இந்த ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டது. சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால், இந்த ஒப்பந்தத்தின்படி, அணுஆயுதம் இல்லாத நாடுகள் அதை வாங்கக் கூடாது. ஏற்கனவே வைத்திருக்கும் நாடுகள் அதைப் பயன்படுத்த கூடாது. இந்த ஒப்பந்தத்தில் பல உட்பிரிவுகள் உள்ளன.

1970ல் அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா உள்ளிட்ட 191 நாடுகள் இதில் கையெழுத்திட்டன. அப்போது இந்த ஐந்து நாடுகள் மட்டுமே அணுவாயுத நாடுகள். அவை இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு அணு ஆயுதங் களை உருவாக்கி சோதனை செய்து உள்ளன. அதனால் அவை ஆயுதங்களை வைத்திருக்க அனு மதிக்கப்பட்டன. இந்த நாடுகளில் அணு ஆயுதங்கள் இருந்தாலும், ஒப்பந்தத்தின் கீழ் அவை அவற்றைக் குறைக்க வேண்டும். இஸ்ரேல், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஒருபோதும் இந்த ஒப்பந்தத்தில் சேரவில்லை. வட கொரியா 2003 இல் இதிலிருந்து வெளியேறியது.

உண்மையில் இந்த ஒப்பந்தம் மிகவும் நன்றாக தன் வேலைகளைச் செய்துள்ளது. 35 ஆண்டுகளுக்கு முன்பு உலகில் 70,000 அணுவாயுதங்கள் இருந்தன. 2020ம் ஆண்டு வெளிவந்த தகவல்களின்படி தற் போது சுமார் 13,500 தான் உள்ளன. அவற்றிலும் 90% க்கும் மேல் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவிடம் உள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் தங்கள் இருப்புக்களைக் குறைத்து வருகின்றன. ஆனால் சீனா, பாகிஸ்தான், இந்தியா மற்றும் வடகொரியா ஆகியவை அவற்றை அதிக ரித்து வருகின்றன என்று நம்பப்படுகிறது. குறிப்பாக பாகிஸ்தானில் 2015 இல் 120 அணு ஆயுதங்கள் இருந்தன. தற்போது சுமார் 160 உள்ளன. 2025ம் ஆண்டுக்குள் 350 அணு ஆயுதங்களை வைத்திருக் கும் நோக்குடன் பாகிஸ்தான் செயல்படுவதாக 6 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு தகவல் வெளியானது. 2019ல் அமெரிக்க ராணுவக் கல்லூரியில் பேசிய ஒரு ராணுவ அதிகாரியும் இதை உறுதி செய்துள்ளார்.

சீனா தனது அணு ஆயுதங்களின் நவீனமய மாக்கலை மேற்கொண்டு வருகிறது. மேலும் அணுசக்தி திறன் கொண்ட போர் விமானங்களை

உருவாக்கி வருகிறது. சீனா தனது அணுசக்தி சம்பந்தப்பட்ட தகவல்களை கடந்த காலங்களை விட தற்போது வெளிப்படையாக பகிர்ந்து வருகிறது. ஆனால் படை எண்ணிக்கை அல்லது எதிர் கால மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய தகவல்களை சிறிய அளவில் மட்டுமே வெளியிடுகிறது. இது எல்லா நாடுகளும் கையாளும் யுக்தி தான். எந்த நாடும் தனது எதிர்கால பாதுகாப்பு திட்டங்களை அம்பலப்படுத்து வது இல்லை. இந்தியா மற்றும் பாகிஸ்தான் அரசாங் கங்கள் அவற்றின் சில ஏவுகணை சோதனைகள் குறித்து அறிக்கைகளை வெளியிடுகின்றன. ஆனால் அவற்றின் ஆயுதங்களின் நிலை அல்லது அளவு குறித்து எந்த தகவலையும் அளிப்பதில்லை.

பாகிஸ்தான் அணு ஆயுதம் தயாரிப்பதை தடுப்பதற்கு, இந்தியாவிற்கு இஸ்ரேல் உதவிக்கரம் நீட்டிய காலமும் உண்டு. பாகிஸ்தான் அணு நிலை யங்களை அழிப்பதில் இஸ்ரேலுக்கு ஏன் ஆர்வம் இருந்தது? இந்த கேள்விக்கு பல மாறுபட்ட கருத்துக் கள் உள்ளன. இந்த பிரச்சனை இன்றும் விவாதத்திற் குரிய விடயமாகவே உள்ளது. 1981 ஆனி 7 ஆம் தேதி, இஸ்ரேலிய விமானப்படையின் மூன்று விமானங் கள் எதிரி நாடுகளின் எல்லைகளைக் கடந்து ஈராக் கில் அழிவை ஏற்படுத்தின. ஈராக்கில் கட்டப்பட்டு வந்த அணு மின் நிலையத்தைத் தகர்க்கவே இந்த தாக்குதல் நடந்தது. அதே வழியில் பாகிஸ்தானின் ஹட்டா அணு நிலையத்தை தகர்க்க இந்தியா விரும்பியது. 1983 பிப்ரவரியில், இந்திய ராணுவ உயர் அதிகாரிகள் இஸ்ரேலுக்கு ரகசிய பயணம் மேற் கொண்டனர். ஹட்டா உலையின் பாதுகாப்பு வளையத்தை கடப்பதற்கு உதவக்கூடிய மின்னணு கருவிகள் குறித்து அவர்கள் விசாரித்தனர். பாகிஸ் தானிடம் இருக்கும் எஃப் – 16 போர் விமானங்கள் குறித்த தொழில்நுட்பத் தகவல்களை இஸ்ரேல் இந்தி யாவுக்கு வழங்கியது. மறுபுறம் மிக் 23 விமானம் குறித்து இந்தியா இஸ்ரேலுக்கு ரகசிய தகவல்களை அளித்தது. இது சோவியத் தயாரிப்பு விமானம். இஸ்ரேலின் அண்டை நாடுகளில் ஒன்று, தன் படை யில் இந்த விமானங்களை வைத்திருந்ததால், இஸ்ரேலுக்கு இந்தத் தகவல் அதிமுக்கியமாகத் தேவைப்பட்டது.

பாகிஸ்தானின் ஹட்டா அணு நிலையத் தின் மீது தாக்குதல் நடத்த, இஸ்ரேலிய ராணுவ அதி காரிகள் மூன்று முறை இந்தியாவை வற்புறுத்திய தாக ஜெருசலேம் போஸ்ட் செய்தித்தாள் 1987ல் கூறியது. இதில் இஸ்ரேலுக்கு என்ன லாபம் என்றால், சுயநலம் தான். பாகிஸ்தான் அணுகுண்டு தயாரித் தால் அது ஈராக், லிபியா அல்லது ஈரானை அடை யக்கூடும் என்று இஸ்ரேல் சந்தேகித்தது. அப்படி நடந்தால், அது இஸ்ரேலுக்கு சாதகமாக முடியாது. அதனால் தான் இவ்வளவு வில்லத்தனமாக யோசித் துள்ளது இஸ்ரேல்.

ஆசிய அணு சக்தி நாடுகள் குறித்து பேசும் போது, வட கொரியாவை மறந்துவிட முடியாது. ஆனால், அந்நாட்டில் இருந்து சாதாரணமாகவே ஒரு தகவலும் கசியாது என்பதால், அணுசக்தி குறித்து கூறவா வேண்டும்? இருந்தாலும், வட கொரிய அணுவாயுத திறன் குறித்து ஒரு சில யூகங்கள் உள்ளன. அதன்படி வட கொரியாவில் 30 முதல் 40 சக்திவாய்ந்த அணுவாயுதங்கள் இருக்கக்கூடும். கடந்த ஆண்டு வட கொரியா ஒரு மிக பெரிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை (Intercontinental ballistic missile) பொது வெளியில் காட்சிப்படுத்தியது. அந்த சமய– த்தில், உலகில் உள்ள அனைத்து நாடுகளுக் கும் ஒரு கணம் பூமி சுற்றுவது நின்றுவிட்டது. ஆம். அந்த அளவுக்கு சக்தி வாய்ந்த ஏவுகணை அது. வட கொரியாவில் இருந்து அமெரிக்காவை துல்லியமாக தாக்கக் கூடிய திறன் கொண்டது. ரஷ்யா, சீனாவை தொடர்ந்து, அமெரிக்காவை தாக்கும் திறன் கொண்ட அணுவாயுதத்தை கொண்ட மூன்றாவது நாடாக தற்போது வட கொரியா உள்ளது. இருந்தாலும், அந்த ஆயுதங்களை பாதுகாப்பிற்காக மட்டுமே வைத் துள்ளதாக, அதிபர் கிம் ஜொங் உன் கூறியுள்ளார். வட கொரியாவில் பல ஆயுதச் சோதனைகள் நடத் தப்பட்டுள்ளன. அதற்கு அமெரிக்கா முதல் தென் கொரியா வரை பல விமர்சனங்களை வெளி யிட்டன. ஆனால் எந்த நேரத்திலும் வட கொரியா தனது அணுசக்தியை விட்டுக் கொடுக்கப் போவது இல்லை. ஏன் என்றால், அவர்களிடம் இருக்கும் மிக முக்கியமான பந்தயக் குதிரையே இந்த அணு சக்தி தான். அதை வைத்துத் தான், அமெரிக்காவுக்கே சவால் விட்டுக் கொண்டிருக்கிறார் கிம். அப்படி இருக்கையில், இதை விட்டுக்கொடுப்பாரா என்ன?

இப்படியாக ஆசிய நாடுகள் அணுசக்தியை விரிவுபடுத்தி வருகின்றன. ஆனால், அணுப் பரம்பற் தடுப்பு உடன்படிக்கையின் படி, அதை அவ்வளவு எளிதில் பயன்படுத்த முடியாது. அதிலும், 'தாக்குதலுக் காக நாங்கள் முதலில் அணு ஆயுதத்தை பயன்படுத்த மாட்டோம்' என்று சில நாடுகள் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளன. ஆசிய நாடுளில் அணு ஆயுத அரசியலில் அடுத்து என்ன நடக்கும் என்பதை பொறுத்திருந்து கவனிக்க வேண்டும்.

# மனசாட்சியால் கைதியானவன்

**"2018 ஆம் ஆண்டு நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியைத் தோற்கடிப்பதில் அவர் வகித்த பங்களிப்புத்தான் அவர் தடுத்து வைக்கப்படுவதற்கும், அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும் காரணமென பல ஆர்வலர்கள் நம்புகின்றனர்"**



தமிழாக்கம் - நிமிர்வு

2021 ஆடி மாதம் இரண்டாம் வாரம் சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International) வழக்கறிஞர் ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவை மனசாட்சியால் கைதியானவர் என அறிவித்துள்ளது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் 15 மாதங்கள் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள ஹிஸ்புல்லாவை இவ்வாறுதான் அடையாளப்படுத்த வேண்டும் என இச்சபை கூறுகிறது.

இந்தப் பதத்தை சர்வதேச மன்னிப்பு சபை நிறுவனர் பீட்டர் பெனன்சன் (Peter Benenson) 1961 இல் உருவாக்கினார். தமது இனம், பாலியல் நோக்கு நிலை, மதம் அல்லது அரசியல் கருத்துக்கள் காரணமாக சிறையில் அடைக்கப்பட்ட எவரையும் இது குறிக்கிறது. வன்முறையில் ஈடுபடாமல் தாம் வைத்திருக்கும் நம்பிக்கைகளை சமாதானமாக வெளிப்படுத்தியமைக்காக சிறையில் அடைக்கப்பட்ட அல்லது துன்புறுத்தப்பட்டவர்களையும் இந்த சொல் குறிக்கிறது.

ஒரு வழக்கறிஞராக ஹெஜாஸ் தனது முஸ்லிம் மார்க்கத்துக்கு செய்த பணிக்காக அவர் இலக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை கூறுகிறது. FreeHejaaz ஐ தங்கள் கைகளிலும் மணிக்கட்டுகளிலும் எழுதி அவற்றை புகைப்படங்களாக சமூக ஊடகங்களில் வெளியிட்டு விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யுமாறு உலகளாவிய ஆர்வலர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த சிறைவாசத்தின் போது ஹெஜாஸ் கோவிட்-19 தொற்றுக்குள்ளானார். பல மாதங்களாக அவரது வழக்கறிஞர்களையோ மற்றும் குடும்பத்தினரையோ சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் அவரது மனைவி ஒரு மகளை பெற்றெடுத்தார். இன்னும் சில மாதங்களில் முதல் பிறந்த நாளைக் கொண்டாட இருக்கும் இக்குழந்தை ஒரு முறை கூட தனது தந்தையைப் பார்த்ததில்லை.

ஹெஜாஸ் ஏப்ரல் 2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புடன் தொடர்புபட்டுள்ளதாக கூறப்பட்டு ஆரம்பத்தில் கைது செய்யப்பட்டார். ஆனால் ஒரு வருட சிறைவைப்பின் பின் அவர் இனவாத பேச்சு பேசியதற்காக, பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் பொதுசன மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் வழக்கு பதிவு செய்தார்.

ஹெஜாசுக்கு எதிரான வழக்கு மிகவும் பலவீனமானது. 'முத்துக்களைப் பாதுகாப்போம்' (Save the Pearls) அறக்கட்டளையை ஹெஜாஸ் ஹிஸ்புல்லா நிர்வகித்து வந்தார். இந்த அறக்கட்டளைக்கு சொந்தமான பள்ளியில் அவர் தீவிரவாத அறிக்கைகளை வெளியிட்டதாகக் கூறிய ஒரே ஒரு சாட்சியின் மீதுதான் இந்த வழக்கு தங்கியுள்ளது.

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச அரசாங்கம் சிறைவைத்த அனைத்து அரசியல் கைதிகளுக்குள்ளும் ஹெஜாசின் வழக்கே ஆகக்கூடியளவு மர்மமாக உள்ளது. ஒரு வழக்கறிஞராகவோ அல்லது ஆர்வலராகவோ அவர் ஆற்றிய பணிகள் எதுவும் தற்போதைய நிர்வாகத்தை கோபப்படுத்தியிருப்பதற்கு வெளிப்படையான காரணங்கள் எதுவுமில்லை. 2018 ஆம் ஆண்டு நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியைத்

# "கோவிட்-19 பாதிக்கப்பட்டு இறந்தவர்களை கட்டாய தகனத்துக்கு உள்ளாக்கும் இனவெறிக் கொள்கைக்கு எதிராக சர்வதேசரீதியில் செயல் பாட்டதனாலேயே ஹெஜாஸ் ஹிஸ்புல்லா அரசாங்கத்தின் கோபத்துக்கு உள்ளானார் என்று பலர் நம்புகிறார்கள்"

தோற்கடிப்பதில் அவர் வகித்த பங்களிப்புத்தான் அவர் தடுத்து வைக்கப்படுவதற்கும், அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும் காரணமென பல ஆர்வலர்கள் நம்புகின்றனர்.

அந்த அரசியலமைப்பு நெருக்கடியின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சட்டவிரோதமாக நாடாளுமன்றத்தை கலைத்ததை எதிர்த்து தேர்தல் ஆணையர் ரத்னஜீவன் ஹூல் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார். அவரை உச்சநீதிமன்றத் தில் ஹெஜாஸ் பிரதிநிதித்துவப்படுத்தினார். நாட்டின் மிக மூத்த சட்டவல்லுனர்களால் சூழப்பட்டிருந்தாலும் ஹெஜாஸ் தன்னுடைய தனித்தன்மையை வெளிப் படுத்தினார். அரசியலமைப்பு நிர்வாகத்தின் பொருள் மற்றும் சர்வாதிகாரத்திற்கான பாதை குறித்து அற்புத மான மற்றும் மறக்கமுடியாத சமர்ப்பிப்புகளைச் செய்தார். அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றக் கலைப்பு அரசியலமைப்பிற்கு விரோதமானது என்று உச்ச நீதிமன்றம் அறிவித்து. இறுதியில் ஆட்சி மாற்றத் தின் தோல்விக்கு களம் அமைத்தது. இந்த வழக்கில் ஹெஜாசின் நட்சத்திரச் செயற்பாட்டை வியந்த மூத்த வழக்கறிஞர்கள் வழக்கின் போது எடுத்த ஒரு குழுப் புகைப்படத்தில் அவரை முன்னால் இருத்தினர்.

கோவிட்-19 பாதிக்கப்பட்டு இறந்தவர்களை கட்டாய தகனத்துக்கு உள்ளாக்கும் இனவெறிக் கொள்கைக்கு எதிராக சர்வதேசரீதியில் செயற்பாட்ட தனாலேயே ஹெஜாஸ் ஹிஸ்புல்லா அரசாங்கத்தின் கோபத்துக்கு உள்ளானார் என்று பலர் நம்புகிறார்கள். அவர் தடுத்து வைக்கப்பட்டு பதினைந்து மாதங்கள் ஆகிய பின்னரும் கொடூரமான மற்றும் நியாயப்படுத் தப்படாத அவரின் சிறைவாசத்திற்கான காரணங்கள் சந்தேகத்துக்கிடமானவை.

ஏப்ரல் 2020 இல் ஹெஜாஸ் கைது செய்யப்பட்டபோது, புதிய அரசாங்கம் அதன் பதவிக் காலத்தில் நான்கு மாதங்களுக்கு குறைவாகவே பூர்த்தி செய்திருந்தது. ஜனாதிபதித் தேர்தல் வெற்றிப் பரவசத்தில் ஹெஜாசின் கைது தொடர்பாக அரசு உருவாக்கிய கதை மற்றும் பிரச்சாரத்தை பலர் நம்பினர். பலர் அவரது அப்பாவித்தனத்தை சந்தே கித்தனர். அவர் தரப்பு நியாயங்களை நம்ப மறுத்தனர். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களில் குற்றவாளிகளை கண்டுபிடித்து தண்டிப்பதாக உறுதியளித்து அதிகாரத் திற்கு வந்த அரசாங்கத்திற்கு அந்த விசாரணையை நடத்த வாய்ப்பையும் சுதந்திரத்தையும் வழங்க வேண்டும் எனக் கருதினர். ஆனால் ஒரு வருடம் கழித்தும் ஹெஜாஸ் பயங்கரவாத தாக்குதல்களில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் பொலிசாரிடம் இல்லை. மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சானி அபேசேகரா மற்றும் கவிஞர் அஹ்னாஃப் ஜசீம் ஆகியோருக்கு எதிரான வழக்குகளைப் போலவே ஹெஜாசின் வழக்கும் மெல்லத் தகர்ந்து வருகிறது.

மோசமான அரசியல் துன்புறுத்தல் களுக்கு ஹெஜாஸ் ஹிஸ்புல்லா பலியானார் என்ப தில் எந்தவித சந்தேகமும் இல்லை. அதிகாரத் தில் இருப்பவர்கள் அவரை சிறையில் அடைத்து வைப்பதில் உறுதியாக உள்ளனர். அவரின் சுதந் திரத்தை மறுக்க எந்த ஒரு நியாயமும் இல்லை என்பது பல மாதங்களாக வெளிப்படையாகி உள்ளது. அவருக்கு எதிரான வழக்கு சர்வதேச அளவில் அலைகளை உண்டாக்கியுள்ளது. கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக அரசாங்கம் விமர்சகர்களைக் கொடூரமாகப் பழிவாங்குகிறது என்ற கருத்தை வலுப்படுத்துகிறது. ஹெஜாஸ் ஹிஸ்புல்லா விடு விக்கப்பட வேண்டும். இந்த அசிங்கமான அத்தி யாயத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டும். நீதியும் கண்ணியமும் இதைக் கோருகின்றன.

**நன்றி: *DailyFT* பத்திரிகை (ஆடி 20, 2021)**

# இயற்கை முறை பசளை தயாரிப்பு




பிரியதர்சினி பன்னீர்செல்வம்-
போதனாசிரியர், விவசாய பயிற்சிக் கல்லூரி,
மருதனார்மடம்.

**இயற்கை முறையில் நைதரசன், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் பசளை தயாரிப்பு முறை**

அரசாங்கம் இரசாயனப் பசளைகள் இறக்குமதியை தடை செய்துள்ளது. இனி எவ்வாறு பயிற்செய்கை மேற்கொள்வது என்பது தொடர்பில் யோசனையாக உள்ளீர்களா? இயற்கைக்கும் மனித சமுதாயத்திற்கும் நன்மை பயக்கும் சேதன உரங்களை பயன்படுத்துங்கள்.

அந்த வகையில் யூரியா, TSP, மற்றும் MOP பசளைக்கு பதிலாக நைதரசன் பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் பசளை வீட்டில் எவ்வாறு தயாரிப்பது என்பது தொடர்பாக சற்று அறிவோம்.

**நைதரசன் பசளை தயாரிப்பு முறை**

இப் பசளையை தயாரிப்பதற்கு நைதரசன் அதிகமாக காணப்படும் இலைகளை தெரிவு செய்து 2 கிழமைகள் நொதிக்க வைத்தல் வேண்டும்.

முதலாவதாக ஒரு கிலோகிராம் கங்குன் மற்றும் சீமைக்கிளுவை இலையையும் எடுத்துக் கொள்ள வேண்டும். இவற்றை நன்கு சிறு துண்டாக வெட்டி, அவற்றுடன் 1 கிலோ சக்கரை கூழை சேர்க்க வேண்டும். இந்தக் கலவையை இரண்டு கிழமைகளுக்கு நொதித்தலிற்காக காற்று இறுக்கமாக மூடி இருட்டான இடத்தில் வைக்க வேண்டும்.

**பொஸ்பரஸ் பசளை தயாரிப்பு முறை**

இப் பசளையை தயாரிப்பதற்கு பொஸ்பரஸ் அதிகமாக காணப்படும் உள்ளீடுகளை தெரிவு செய்து 2 கிழமைகள் நொதிக்க வைத்தல் வேண்டும்.

அரை கிலோ வாழைப்பூவை எடுத்து சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ள வேண்டும். பின் அரை கிலோ முட்டைக்கோதை எடுத்து தூளாக்கி அதனுள் ஒரு தேசிக்காய் சாற்றினை விட்டுக் கலக்கி 30 நிமிடங்கள் வைக்க வேண்டும். பின்னர், வெட்டிய வழைப்பூவையும் 1 கிலோ சக்கரை கூழையும் சேர்த்து இரண்டு கிழமைகளுக்கு நொதித்தலிற்காக காற்றுப்புகாவண்ணம் இறுக்கமாக மூடி இருட்டான இடத்தில் வைக்க வேண்டும்.

**பொட்டாசியம் பசளை தயாரிப்பு முறை .**

இப் பசளையை தயாரிப்பதற்கு பொட்டாசியம் அதிகமாக காணப்படும் உள்ளீடுகளை தெரிவு செய்து 2 கிழமைகள் நொதிக்க வைத்தல் வேண்டும்.

வெட்டிய வாழைப்பழம், கொய்யா, ஜம்பு பழங்கள் (இவை அதிகளவு பொட்டாசியம் கொண்ட பழங்கள்) என்பவற்றின் கலவை ஒரு கிலோ கிராம் எடுத்து கொள்ள வேண்டும். அதனுடன் 1 கிலோ சக்கரை கூழை சேர்த்து இரண்டு கிழமைகளுக்கு காற்றுப்புகாமால் இறுக்கமாக மூடி இருட்டான இடத்தில் வைக்க வேண்டும். செயற்கை உரங்களுக்கு மாற்றீடாக விவசாயிகள் இவ்வாறான இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட உரங்களை பயன்படுத்துவது நல்லது.

# ஜனநாயக போராட்டங்களை ஒடுக்க அரசு பாவிக்கும் ஆயுதம் கொரோனா



**“தனிமைப்படுத்தற் சட்டத்தின் கீழ் மூன்று குழுக்களை மட்டுமே தனிமைப்படுத்த முடியும். வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், ஒரு நோயாளியுடன் நேரடித் தொடர்பு இருந்தவர்கள், மற்றும் சுகாதாரத் துறையால் பரிந்துரைக்கப்பட்டவர்கள்”**

**- சந்துன் பிரியங்கரா விதானகே-**
**நன்றி - nivahal.com**

கொத்தலாவெல தேசிய பாதுகாப்பு பல்கலைக் கழக சட்டத்தை எதிர்த்து கொழும்பில் கடந்த 08.07.2021 அன்று பல்வேறு அமைப்புகளை பிரதி நிதித்துவப்படுத்தும் செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் ஒன்று கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த சட்டத்திற்கு எதிரான போராட்டங்கள் நாட்டின் பல மாவட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெற்றன.

இலங்கை காவற்துறையினரால் பாராளுமன்ற சதுக்கத்துக்கு அருகில், எதிர்ப்பாளர்கள் வலுக் கட்டாயமாக பேருந்துகளில் ஏற்றப்படுவதைக் காண முடிந்தது. ஒரு வயதான தாய் உட்பட பல பெண் களின் ஆடைகள் கிழிந்து காணப்பட்டன. பல முக்கிய சமூக ஆர்வலர்களும் கைது செய்யப்பட்டனர்.

இந்த குழுவிற்கு நீதிமன்றத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்த போதும் எந்தவொரு சட்ட விதி களும் இல்லாமல் அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பேருந்துகளில் ஏற்றப்பட்டு முல்லைத்தீவில் உள்ள ஒரு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்படும் வரை அவர்கள் இருக்கும் இடம் குறித்து ஏற்பாட்டா ளர் குழுவுக்கு அறிவிக்கப்படவில்லை. இந்த கடத்தல் மற்றும் தடுப்புக்காவல் என்பது காவல்துறையின் சட்ட விரோத தலையீடு என்று கூறலாம். இந்த விடயம் பாராளுமன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. எனினும் இதுபோன்ற கைதுகள் தொடரும் என்று காவல்துறை பொறுப்பான அமைச்சர் மிகவும் ஆணவத்துடன் பாராளுமன்றத்தில் கூறினார்.

முன்னணி சோசலிஸ்ட் கட்சியின் அரசியல் பணியகத்தின் உறுப்பினரான துமிந்தா நாகமுவா கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். அவர் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்ற காவல் துறையின் கோரிக்கையை நிராகரிக்க நீதிமன்றம் முடிவு செய்தது. நீதிமன்றத்திற்கு அத்தகைய சட்ட அதிகாரம் இல்லை என்று அமைச்சர் கூறினார். காவல்துறை நீதித்துறைக்கு மேலே செயல்படுகிறது என்பதை இந்த சம்பவம் காட்டுகிறது.

தனிமைப்படுத்தற் சட்டத்தின் கீழ் மூன்று குழுக்களை மட்டுமே தனிமைப்படுத்த முடியும். வெளி நாட்டிலிருந்து வருபவர்கள், ஒரு நோயாளியுடன் நேரடித் தொடர்பு இருந்தவர்கள், மற்றும் சுகாதாரத் துறையால் பரிந்துரைக்கப்பட்டவர்கள் என்ற மூன்று குழுவினரே தனிமைப்படுத்தற் சட்டத்துக்கு ஆளாக்கப் பட முடியும்.


குறித்த போராட்டத்தின் போது கைது செய்யப் பட்ட யாரும் இந்த மூன்று குழுக்களைச் சேர்ந்தவர்கள் அல்ல. அரசாங்கத்தின் மக்கள் விரோத திட்டத்திற்கு எதிராக மக்கள் எழுப்பும் குரலை அடக்குவதற்கு ஒரு சாக்காக கோவிட் தொற்றுநோயைப் பயன்படுத்திய காவல்துறையினரின் சட்டவிரோத தலையீட்டைத் தவிர இங்கு எதுவும் இல்லை.

போராட்டக்காரர்கள் சட்டவிரோதமாக அழைத்துச் செல்லப் பட்டுக் கொண்டிருக்கும் அதே வேளையில், தேசிய பட்டியலில் இருந்து நாடாளு மன்றத்துக்கு சென்ற ஜனாதிபதியின் சகோதரர் பசிலின் பதவியேற்பை அரச தரப்பு ஆதரவாளர்கள் சந்திக்கு சந்தி கூட்டமாக நின்று வெடிகொளுத்தி கொண்டாடினர். குறித்த இடங்களில் பொலிஸார் எவரையும் காணவில்லை. ஒருவரும் தனிமைப்படுத் தலுக்கு ஆளாகவில்லை.

கோத்தாவின் கருத்தியல் செல்வாக்கு மேலும் சரிந்துள்ளது. அவர் செயற்திறனை நம்பி அவருக்கு வாக்களித்த நடுநிலை வாக்காளர்களால் கூட அவர் விமர்சிக்கப்படுகிறார். அதற்குப் பதிலளிக்க அடக்குமுறை இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

(19 ஆம் பக்கம் பார்க்கவும்)

# உய்குர்களை கைவிடும் முஸ்லிம் நாடுகள் வளர்ந்து வரும் சீனாவின் கிடுக்கிப்பிடி



ஜோமானா கரட்ஷே, குல் ட்யூஸ்
(Jomana Karadsheh, Gul Tuysuz, CNN)
தமிழாக்கம் – நிமிர்வு

2018 பிப்ரவரி மாதம் துபாயில் ஒரு நாள் அமானிசா அப்துல்லாவும் அவரது கணவர் அஹ்மத் தாலிப்பும் தமது குழந்தைகளுக்கு ஆடைகளை வாங்குவதற்காக சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுதுதான் அவர்களது வாழ்க்கையையே தலைகீழாக மாற்றப் போகும் செய்தி வந்தது. அஹ்மத் உடனடியாக ஒரு காவல் நிலையத்தில் புகார் செய்ய வேண்டியிருந்தது. அஹ்மத் அமானிசாவை ஒரு நண்பரின் வீட்டில் இறக்கிவிட்டான். பின்னர் வந்து அவளை அழைத்துச் செல்வதாக உறுதியளித்தான். ஆனால் அவன் திரும்பி வரவே இல்லை.

அவர்களின் துபாய் அடுக்குமாடி குடியிருப்பில், 29 வயதான நிறைமாதக் கர்ப்பிணியான அமானிசா தூக்கமில்லாமல் இரவு முழுவதும் பிரார்த்தனை செய்து அழுது கொண்டிருந்தாள். அஹ்மதிற்கு மீண்டும் மீண்டும் அழைப்பு விடுத்துப் பார்த்தாள். நேரம் கடந்தது. பதில் வரவில்லை.

மறுநாள் காலையில், தனது 5 வயது மகனுடன் பொலிஸ் நிலையத்திற்கு சென்று ஓர் அதிகாரியிடம் தனது இக்கட்டான நிலையை விளக்க முயன்றாள். அவள் பேசிக்கொண்டு இருக்கும் போது, அவளுடைய பையன் அவளுடைய கையை இழுத்தான். அமைதியாக, அஹ்மத் அமர்ந்திருந்த சிறைச்சாலையை நோக்கி சுட்டிக்காட்டினான்.

13 நாட்களாக அமானிசா தனது வீட்டிற்கும் சிறைச்சாலைக்கும் இடையில் முன்னும் பின்னுமாக அலைந்தாள். சட்ட நிறைவேற்று அதிகாரிகளிடம் அஹ்மத்தை விடுவிக்குமாறு கெஞ்சினாள். ஒவ்வொரு வருகையிலும், அவளது கணவன் மேலும் மேலும் மனச்சோர்வடைந்து காணப்பட்டான். சீனாவின் நீண்ட கரங்கள் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள தனது உய்குர் குடும்பத்தை பற்றிக் கொள்ளத் தொடங்கி உள்ளதாக தான் நம்புவதாக அவன் அவளிடம் கூறினான்.

"இங்கே இருப்பது பாதுகாப்பானது அல்ல. நீங்கள் எங்கள் பையனை அழைத்துச் சென்று துருக்கிக்குச் செல்ல வேண்டும்" என்று அவன் கடைசி உரையாடலில் அமானிசாவிடம் கூறினான். "பிறக்கும் குழந்தை ஒரு பெண் என்றால், தயவுசெய்து அவளுக்கு அமீனா என்று பெயரிடுங்கள். ஒரு பையன் என்றால், அவனுக்கு அப்துல்லா என்று பெயரிடுங்கள்."

ஒரு வாரம் கழித்து, அஹ்மத் ஐக்கிய அரபு எமிரேட் தலைநகர் அபுதாபிக்கு அனுப்பப்பட்டான். ஐந்து நாட்களுக்குப் பிறகு அபுதாபி அதிகாரிகள் அவனை சீனாவிடம் ஒப்படைத்ததாக அமானிசா விடம் சொன்னார்கள். அவர்களது மகள் அமினா ஒரு மாதத்திற்குப் பிறகு துருக்கியில் பிறந்தாள். அவள் தனது தந்தையை சந்தித்ததே இல்லை.

எகிப்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சவுதி அரேபியா ஆகிய மூன்று முக்கிய அரபு நாடுகளில் சீனாவின் வேண்டுகோளின் பேரில் உய்குர்கள் காவலில் வைத்து நாடு கடத்தப்படுகின்றனர். CNN செய்தி நிறுவனத்தால் சேகரிக்கப்பட்ட பன்னிரண்டுக்கும் மேலான சாட்சிகளில் அமானிசாவுடையதும் ஒன்று. இந்த ஒப்படைப்புக்கள் குறித்து சி.என்.என் பலமுறை இந்த நாடுகளிடம் கருத்துக் கேட்டது. அவர்கள் பதிலளிக்கவில்லை. சி.என்.என் கேள்விகளுக்கு சீன அரசாங்கமும் பதிலளிக்கவில்லை.

எகிப்தில், குடி உரிமைக் குழுக்கள் நூற்றுக் கணக்கான தடுப்புக்காவல்களை ஆவணப்படுத்தியுள்ளன. 2017 இல் குறைந்தது 20 உய்குர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளார்கள். அவர்களில் பெரும்பாலானோர் புகழ்பெற்ற இஸ்லாமிய அல்–அசார் பல்கலைக்கழக மாணவர்கள். சவூதி அரேபியாவில் கடந்த இரு வருடங்களில் இஸ்லாத்தின் புனித நகரான உம்ராவுக்கு யாத்திரை மேற்கொண்ட ஒரு

உய்குர் முஸ்லிம் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. மற்றொருவர் புனித யாத்திரைக்கு பின்னர் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்படுவதை எதிர்கொண்டு இருக்கிறார்.

சீனாவின் சின்ஜியாங் பிராந்தியத்தில் இருந்து பெருமளவில் முஸ்லிம் உய்குர்கள் காணாமல் போவது பற்றிய அறிக்கைகள் புலம்பெயர்ந்த உய்குர்களை பதட்டத்துக்கு உள்ளாக்கி உள்ளன. நாடு கடத்தப்பட்டவர்களும் சின்ஜியாங்கில் உள்ள தடுப்பு முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அவர்களது குடும்பங்கள் அச்சப்படுகின்றன. அங்கு 2 மில்லியன் உய்குர்கள் சிறைவைக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பெய்ஜிங்கின் உலகளாவிய செல்வாக்கு விரிவடைந்து வருகிறது. சீனா உய்குர்களை நடத்தும் விதம் குறித்து மேற்கத்திய நாடுகள் கவனம் செலுத்துவதாக சொல்லிக் கொள்கின்றன. ஆனால், சீனா உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உய்குர் இனக்குழு உறுப்பினர்கள் மீது கட்டவிழ்த்து விடும் ஒடுக்கு முறையை மத்திய கிழக்கு மற்றும் அதற்கு அப்பால் உள்ள நாடுகள் அதிகளவில் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்று மனித உரிமை ஆர்வலர்கள் அஞ்சுகின்றனர்.

ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்ட ஒரு மனித உரிமைகள் கண்காணிப்பு குழு அறிக்கையில், உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான உய்குர்களை சீனா கண்டுபிடித்துள்ளது என்றும் அவர்களை சீனாவுக்கு நாடுகடத்தி துன்புறுத்தல்களை எதிர்கொள்ள வைத்துள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது. பல சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு "என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியாது" என்று அறிக்கை சொல்கிறது.

உய்குர்கள் இந்நாடுகளிலிருந்து நாடுகடத்தப்படுவது 'இஸ்லாமிய ஒற்றுமை' தம்பட்டம் அடிக்கும் கருத்துக்களை சிதறடிக்கின்றது. இது சீனாவின் பலம் வேகமாக வளர்ந்து வருவதையும் உய்குர்கள் உலக அரங்கில் தனிமைப்படுத்தப்படுவதையும் சுட்டி நிற்கிறது.

பிப்ரவரி 20, 2018 அன்று அஹ்மத் தலிப் காவலில் வைக்கப்பட்டார். எட்டு நாட்களுக்குப் பிறகு துபாயின் அரச வக்கீல் வெளியிட்ட ஆவணத்தை சி.என்.என் பார்வையிட்டது. அதில் அவரை சீனாவிடம் ஒப்படைக்குமாறு சீனா விடுத்த கோரிக்கை உறுதி

**"பல உய்குர்கள் நீண்ட காலமாக தங்கள் தாயகத்தில் ஓரங்கட்டப்பட்டிருப்பதை உணர்ந்திருக்கிறார்கள்"**

செய்யப்பட்டுள்ளது. அக்கோரிக்கையில் அவரது சீனப் பெயரான ஐஹைமதி தலிஃபு என்ற பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அஹ்மத்தை ஒப்படைப்பதற்கு போதிய ஆதாரம் இல்லாததால் துபாய் அதிகாரிகள் ஆரம்பத்தில் அவரை விடுவிக்க முடிவு செய்ததாக அந்த ஆவணம் கூறுகிறது. துபாய் வக்கீல் அலுவலகம் "மேலே குறிப்பிட்ட நபரைத் தேடுவதை நிறுத்தி, அவர் மீதான அனைத்து கட்டுப்பாடுகளையும் நீக்கிவிட வேண்டும்" என்று பொலிசாருக்கு அறிவுறுத்தியது.

ஆனால், பிப்ரவரி 25, 2018 அன்று, அஹ்மத் நாடு கடத்தப்பட்டதாக அமானிசாவுக்கு தெரிவிக்கப்பட்டது. கணவர் மீது என்ன குற்றம் சாட்டப்பட்டது என்பதை ஐக்கிய அரபு எமிரேட் அதிகாரிகள் ஒரு போதும் விளக்கவில்லை. மூன்று வருடங்கள் ஆனாலும், அவளுக்கு இன்னும் பதில் இல்லை.

"என் கணவர் ஏதேனும் குற்றம் செய்திருந்தால், அவர்கள் ஏன் என்னிடம் சொல்லவில்லை? சீனா ஏன் என்னிடம் சொல்லவில்லை? என் கணவர் இன்னும் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை," என்று சி.என்.என்னிடம் கூறினார். "இரு நாட்டினரும் அமைதியாக இருக்கிறார்கள், முற்றிலும் மௌனமாக இருக்கிறார்கள்."

ஐக்கிய அரபு எமிரேட்டை நோக்கி, "நீங்கள் ஏன் உங்கள் சொந்த நீதிமன்றக் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை? நீங்கள் முஸ்லீம் நாடு என்று சொல்கிறீர்கள். இது நடந்ததிலிருந்து நான் இதனை ஒரு போதும் நம்பவில்லை. இனியும் ஒருபோதும் நம்பமாட்டேன்." என்று கதறினார்.

அகமது வழக்கு குறித்து சி.என்.என் பலமுறை கோரிக்கை விடுத்ததற்கு துபாய் அதிகாரிகளும் ஐக்கிய அரபு எமிரேட் வெளியுறவு அமைச்சகமும் பதிலளிக்கவில்லை.

**முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளின் நாடுகடத்தல்**

சீனாவின் இனரீதியாக மிகவும் வேறுபட்ட பிராந்தியங்களில் சின்ஜியாங் ஒன்றாகும். இது பல்வேறு வகையான முஸ்லிம் இனக்குழுக்களுக்கு சொந்தமானது. தங்கள் தனித்துவமான கலாச்சாரத் தையும் மொழியையும் கொண்ட உய்குர்கள் அவற்றுள் பெரும்பான்மையினர்.

பல உய்குர்கள் நீண்ட காலமாக தங்கள் தாயகத்தில் ஓரங்கட்டப்பட்டிருப்பதை உணர்ந் திருக்கிறார்கள். நியாயமற்ற பொருளாதாரக் கொள் கைகள் மற்றும் மத நடத்தை, ஹலால் உணவு மற்றும் இஸ்லாமிய உடை ஆகியவற்றில் அரசாங் கத்தால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் ஆகிய வற்றால் இனங்களுக்கு இடையிலான பதட்டங்கள் தூண்டப்பட்டுள்ளன.

சமீபத்திய ஆண்டுகளில், ஜனாதிபதி ஜின்பிங்கின் கீழ், பிராந்தியத்தின் சிறுபான்மை குழுக்கள் மீதான பெய்ஜிங்கின் கொள்கை குறிப்பிடத் தக்க வகையில் கடினப்படுத்தப்பட்டுள்ளது. இது பலரை வெளிநாடுகளுக்குச் செல்லத் தூண்டுகிறது.

2016 முதல், சின்ஜியாங்கில் உய்குர் குடி மக்களை சீன அரசாங்கம் மிகப்பெரிய, பலப்படுத் தப்பட்ட தடுப்பு மையங்களில் வைத்துள்ளதாக சான்றுகள் வெளிவந்துள்ளன. இரண்டு மில்லியன் மக்கள் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக் கலாம் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை தெரி வித்துள்ளது.

முன்னாள் கைதிகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் இவற்றை “வதை முகாம்கள்” என்று அழைக்கிறார்கள். இஸ்லாத்தை மறக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்ட தீவிர போதனைக்கு கைதிகள் உட்படுத்தப்படுகிறார்கள். மாண்டரின் மொழியைக் கற்றுக் கொள்ள நிர்பந்திக்கப்படுகிறார்கள். கம் யூனிஸ்ட் கட்சி பிரச்சாரத்தில் மூழ்கடிக்கப்படு கிறார்கள்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை சீனா கடுமையாக மறுக்கிறது. சின்ஜியாங் முகாம்கள் தன்னார்வ “தொழில் பயிற்சி மையங்கள்” என்று வலியுறுத்துகிறது. மத தீவிரவாதம் மற்றும் பயங்கர வாதத்தை முறியடிக்க அவை வடிவமைக்கப்பட் டுள்ளன என்று சொல்கிறது.

ஆனால் முன்னாள் கைதிகளிடமிருந்து சி.என்.என் சேகரித்த சாட்சியங்கள் கட்டாய உழைப்பு, சித்திரவதை, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சக கைதிகளின் இறப்பு போன்ற சம்பவங்களை விவரிக் கின்றன. அமெரிக்க வெளியுறவுத்துறை உய்குர் களுக்கு எதிராக “இனப்படுகொலை” செய்வதாக பெய்ஜிங்கை குற்றம் சாட்டியுள்ளது.

கலாச்சார அழிப்புக்கு மேலாக சீன அரசாங் கம் உய்குர்களை குடும்பக் கட்டுப்பாட்டுக்கு உட்படு மாறு கட்டாயப்படுத்தியதாகவும், கட்டாயக் கருத்தடை செய்வதாகவும் மனித உரிமைகள் குழுக்கள் மற்றும் வெளிநாட்டு உய்குர் ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பல ஆண்டுகளாக, வெளிநாடுகளில் உள்ள உய்குர்கள் சின்ஜியாங்கில் காணாமல் போன தமது உறவினர்களைப் பற்றி பேசியுள்ளனர். குடும்பங்கள் சின்னாபின்னப் படுத்தப்பட்டுள்ளன. பெற்றோரிடமி ருந்து எந்த தொடர்பும் இல்லாமல் பல குழந்தைகள் அனாதைகளாக வளர்ந்து வருகின்றனர்.

ஒஸ்லோவை தளமாகக் கொண்டு செயற்பட்டு வரும் உய்குர் செயற்பாட்டாளர் அப்துவேலி அயூப், 2017 மற்றும் 2019 க்கு இடையில் மூன்று முஸ்லீம் பெரும்பான்மை நாடுகளில் இருந்து குறைந்தது 28 உய்குர் நாடு கடத்தப்பட்டுள்ளதை ஆவணங்களுடன் உறுதிப்படுத்தியுள்ளார். எகிப்திலிருந்து 21 பேரும், சவுதி அரேபியாவிலிருந்து ஐந்து பேரும், அஹ்மத் உட்பட இரண்டு பேர் ஐக்கிய அரபு எமிரேட்சிலிருந் தும் நாடு கடத்தப்பட்டுள்ளார்கள்.

ஆனால் இத்தகவல்கள் வெறும் ஆரம்பம் மட்டுமே என்று அவர் அஞ்சுகிறார். காணாமல் போன வர்களினதும், சின்ஜியாங்கில் உள்ள மற்ற குடும்ப உறுப்பினர்களிதும் பாதுகாப்பு கருதி பலர் மௌன மாக இருப்பதாக அவர் கூறுகிறார்.

மத்திய கிழக்கில் நிலவும் குழப்பமான அரசியற் சூழலை சீனா சாதுரியமாக கையாள்கிறது. அதன் நடவடிக்கைகள் அரசியல் பிளவுகளுக்கு அப்பாற்பட்டு உள்ளன. சவூதி அரேபியாவுடனும் அதன் பிராந்திய பரம எதிரியான ஈரானுடனும் வலுவான உறவைக் வைத்துள்ளது. லெபனான் போன்ற நிதி நெருக்கடியில் இருக்கும் மத்திய கிழக்கு நாடுகள்



சீனாவின் பொருளாதார உதவித் தூண்டிலிலிருந்து தப்புவது கடினம். இதேபோல், கோவிட் தொற்று நோயால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியை எதிர் கொள்ள எண்ணெய் வளம் நிறைந்த வளைகுடா அரபு நாடுகள்கூட சீனாவை ஒரு உயிர்காப்புப் படகாக கருதுகின்றன.

2019 ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சீனா மீதான மேற்கத்திய விமர்சனங் களுக்கு பதிலளித்து வெளியிட்ட பகிரங்க கடிதத்தில், ஐக்கிய அரபு எமிரேட், ஈரான், எகிப்து மற்றும் சவுதி அரேபியா உட்பட 12 முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள் சின்ஜியாங்கில் சீனாவின் கொள்கைகளை பகிரங்கமாக ஆதரித்தன. அவர்களுடன் மேலும் 25 நாடுகள் அதில் கையொப்பமிட்டு இருந்தன.

2020 ஆம் ஆண்டு மாசி மாதத்தில் பெய்ஜிங்கிற்கான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தூதர் அலி அல்–தஹெரி சின்ஜியாங்கிற்கு வருகை செய் தார். அதனைத் தொடர்ந்து நடந்த நேர்காணலில் அம் மாகாணத்தில் சீனாவின் கொள்கைகளை பகிரங்க மாக பாராட்டினார். இந்த வருகையின் போது அவரை மிகவும் கவர்ந்தது “சிஞ்சியாங்கிற்கு சாதகமான சீனாவின் பார்வையும் திட்டமும்” என்று கூறினார். “சீனப் பொருளாதாரத்தில் சின்ஜியாங் பங்கு வகிக்க வேண்டும் என்றும் அதன் ஸ்திரத்தன்மையையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த வேண்டும் என்றும் சீனா விரும்புகிறது” என்றும் அவர் கூறினார்.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சீனா தொடர்பான மூத்த ஆராய்ச்சியாளர் மாயா வாங்கைப் பொறுத்தவரை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் எதேச்சதிகார அரசாங்கங்களால் உய்குர்கள் நடத்தப் படும் முறை ஆச்சரியமளிக்கவில்லை. இந்த நாடுகள் சித்திரவதைக்கு எதிரான ஐ.நா.வின் பிரகடனத்தில் கையெழுத்திட்டிருக்கின்றன என்பது இந்த இடத்தில் குறிப்பிடத்தக்கது..

“இந்த அரசாங்கங்கள் மனித உரிமைகள் பற்றி கவலைப்படுவதில்லை. அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அரசாங்கங்கள். தங்கள் குடி மக்களையே துன்புறுத்துபவர்கள். உய்குர்களை நாடு கடத்தும்போது ஜனநாயகம் பற்றி அவர்கள் கவலைப் படுவது இல்லை.” என்று அவர் கூறினார்.

### எகிப்தில் காணாமல் ஆக்கப்படல்

29 வயதான மரியம் முஹம்மது தனது இரண்டு மகன்களிடமிருந்து ஒரு இருண்ட ரகசியத்தை மறைத்து வைத்து வருகிறார். அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய ஒரு கொடூரமான யதார்த்தத்திலிருந்து அவர்களைக் காப்பாற்ற முயற்சிக்கிறார். அவர்களின் தந்தை முஹ்தார் ரோஸி ஒரு நீண்ட வெளிநாட்டு வேலை பயணத்தில் இருப்பதாக அவர்களிடம் சொல்லியிருக்கிறார். அவர் காணாமல் போய் கிட்டத் தட்ட நான்கு ஆண்டுகளாகி விட்டன.

ஆனால் சலாஹெடினும் அலாதீனும் அவரைப் பற்றி கேட்பது அரிது. அவர்களின் தந்தை காணா மல் போனபோது அவர்களில் ஒருவருக்கு வயது 18 மாதங்கள் மற்றவருக்கு வயது 5 மாதங்கள் மட்டுமே. கடைசியாக முஹ்தாரிடமிருந்து ஆடி 16, 2017 அன்று ஒரு தகவல் கிடைத்தது. அவர் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாக ஒரு செய்தியை அனுப்பியிருந்தார்.

சீன அரசாங்கத்தின் உத்தரவின் பேரில் நடந்தது என்று நம்பப்படும் ஒரு சுத்திகரிப்பு நடவடிக் கையில் எகிப்திய பாதுகாப்பு சேவைகளால் கூட்டிச் செல்லப்பட்ட பல உய்குர்களில் முஹ்தாரும் ஒருவர். இந்த நடவடிக்கை மனித உரிமைக் கண்காணிப் பகத்தால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களின் கூற்றுப்படி, ஆடி 2017 தொடரில் தொடர்ச்சியாக 62 உய்குர்கள் கைது செய்யப்பட்டனர். உய்குர்களின் பிரபலமான உணவகங்கள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் அவர்களது வீடுகளிலிருந்து கைது செய்யப் பட்டவர்களில் பலர் அல்–அசார் பல்கலைக்கழக மாணவர்கள்.

தனது கதையை விவரிக்கும் போது தன் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட துக்கத்தை விட்டுவிட்டு சம்பவம் தொடர்பான உண்மைகளை மட்டுமே மரியம் நிதானமாக முன்வைக்கிறார். ஆனால் கணவனின் கடைசி வார்த்தைகளை நினைவு கூர்ந்த போது மூச்சுத் திணறுகிறாள். “அவர் சொன்னார்: ‘நீ எனக்கு விலைமதிப்பற்றவள். நான் உன்னை மிகவும் நேசிக் கிறேன்’.”

"நான் வலுவாக இருக்க முயற்சிப்பதில் களைத்து விட்டேன்." என்று சொல்லியவாறே அவள் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள். "என் குழந்தைகள் காரணமாக, என் கணவர் காரணமாக நான் பலமாக இருக்க முயற்சிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்."

சீனாவும் எகிப்தும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்ட ஒரு வருடத்திற்குள் நிகழ்ந்ததாகக் கூறப்படும் நாடுகடத்தல்களை அந்நாடுகள் ஒருபோதும் அதிகாரப்பூர்வமாக ஒப்புக் கொள்ளவில்லை. 2017 நிகழ்வுகள் குறித்து சி.என். என்னிற்கு கருத்து தெரிவிக்க இரு அரசாங்கங்களும் மறுத்து விட்டன. அந்த ஆண்டின் தொடக்கத்தில், வெளிநாடுகளில் படிக்கும் உய்குர் மாணவர்கள் அனைவரும் நாடு திரும்ப வேண்டும் என்று சீனா கோரியது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

எகிப்தில் சட்டபூர்வமாக குடியிருப்பதற்கு தேவையான அனைத்து ஆவணங்களும் தம்மிடம் இருந்தன என்று மரியம் கூறுகிறார். "எங்களிடம் கடவுச்சீட்டுகள் உள்ளன. எங்களிடம் எகிப்திய வதிவிட அட்டைகள் உள்ளன. எகிப்தில் படிப்பதற்கான சீன தூதரகம் வழங்கிய அனுமதியும் உள்ளது. எனவே, நாங்கள் இதைப் பற்றி அதிகம் கவலைப்படவில்லை." தனது குடும்பத்தின் சட்டபூர்வமான நிலையை உறுதிப் படுத்தும் ஆவணங்களையும் கெய்ரோவில் உள்ள சீன தூதரகம் வழங்கிய திருமண சான்றிதழையும் காட்டினார்.

ஆடி 2017 ஆரம்பத்தில் சுற்றிவளைப்புகள் பற்றிய செய்திகள் பரவத் தொடங்கியதும் மரியத்தின் குடும்பத்தினர் தலைமறைவாகினர். நாட்டை விட்டு வெளியேறும் திட்டங்களை வகுத்தனர். மரியமும் சிறுவர்களும் துருக்கியின் இஸ்தான்புல்லுக்குப் விமானத்தில் பறப்பார்கள். ஆனால் முஹ்தார் கைது செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று அவர்கள் நம்பியதால், அவர் ஜோர்டானுக்கு ஒரு படகில் செல்வார். ஆனால் தனது மனைவிக்கு அவர் அனுப்பிய கடைசி செய்தியில், எகிப்தின் நுவைபா துறைமுகததில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாக முஹ்தார் அவரிடம் கூறினார்.

அதைத் தொடர்ந்து மரியம் அவனை வெறித்தனமாக தேடினாள். ஆபத்தானதென்றாலும் எகிப்துக்கு மீண்டு ஒரு வழக்கறிஞரை வைத்து தேடினாள். ஆனால் காவல்துறையினர் முஹ்தார் பற்றிய எந்த பதிவும் தம்மிடம் இல்லை என்று சொன்னார்கள். "என் கணவர் காற்றில் கரைந்து விட்டது போல் இருக்கிறது," என்று அவர் கூறுகிறார்.

**புனித யாத்திரையின் போது காணாமல் ஆக்கப்படல்**

இஸ்தான்புல்லின் சவுதி துணைத் தூதரகத்திற்கு வெளியே பனியில் ஒரு சிறிய குழு அமைதியாக நிற்கிறது. பத்திரிகையாளர் ஜமால் கஷோகி ஐப்பசி 2018 கொலை செய்யப்பட்ட மோசமான இடம் அது.

நூரிமன் வேலி என்ற பெண் அக்குழுவுக்கு தலைமை தாங்குகிறாள். கண்ணாடிகளில் படிந்து பனி அவள் பார்வையை மறைக்கிறது. கைகள் நடுங்குகின்றன. "என் தந்தையை சீனாவுக்கு நாடு கடத்த வேண்டாம், அவரை அவர் வசிக்கும் நாடான துருக்கிக்கு அனுப்புங்கள்." என்ற சவுதி அரேபியாவுக்கு சொல்லும் வாசகத்தைத் தாங்கிய ஒரு பலகையை பிடித்திருக்கிறாள்:

அவளது தந்தை ஹம்துல்லா அப்துவேலி இஸ்லாத்தின் புனித நகரங்களான மக்கா மற்றும் மதீனாவுக்கு யாத்திரை செல்லும் போது சவுதியில் தடுத்து வைக்கப்பட்டார். அவர் இன்னும் நாடு கடத்தப்படவில்லை. மேலும் நூரிமனும் அவரது சகோதரியும் நேரவோட்டத்திற்கு எதிரான ஒரு பந்தயத்தில் ஓடிக்கொண்டு உள்ளனர். இன்னுமொரு பெற்றோரையும் இழந்து விடக்கூடாது என்று தவிப்பில் உள்ளனர்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, சின்ஜியாங்கில் இருந்த தங்கள் தாயுடனான தொடர்பை அவர்கள் இழந்தனர். "நாங்கள் எங்கள் தந்தையையும் இழந்தால், அது நம்மை அழித்துவிடும்" என்று அவர் கூறினார். யாத்திரை மேற்கொண்டிருந்த நேரத்தில் கோவிட் தொற்றுநோய் காரணமாக சவுதி அரேபியாவின் விமான நிலையங்கள் மூடப்பட்டதால் ஹம்துல்லா சவுதியில் சிக்கிப் போனார்.

ஐப்பசியில், தான் "சீன முகவர்களால்" பின் தொடரப்படுவதாக சந்தேகிப்பதாக குடும்ப உறுப்பினர்களிடம் கூறினார். ஒரு மாதத்திற்குப் பிறகு, ஹம்துல்லாவும் அவருடன் தங்கியிருந்த இன்னுமோர் உய்குர் இனத்தவரும் அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டனர். மனித உரிமைகள் கண்காணிப்பகமும் மற்றவர்களும் அவர்களை விடுவிக்க கோரிக்கை விடுத்தனர். ஆனால் இருவரிடமிருந்தும் பின்னர் எந்தத் தகவலும் இல்லை.

மக்காவிற்கு யாத்திரையின் போது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் நபர்களில் இரண்டாவது உய்குர் ஹம்துல்லா ஆவார். ஆடி 2018 இல், உஸ்மான் அகமது என்பவரும் புனித இடங்களுக்கு விஜயம் செய்தபோது சவுதி அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். உஸ்மான் அகமதுவை கண்டுபிடிக்க துருக்கியில் உள்ள அவரது குடும்பத்தினர் மூன்று மாதங்களாக முயற்சி எடுத்தனர். பின்னர் சவூதி அரேபியாவில் உள்ள ஒரு வயதான உறவினர் அதிகாரிகளிடமிருந்து உஸ்மான் இருக்கும் இடம் குறித்து தனக்கு தகவல் கிடைத்ததாக கூறினார். அந்த உறவினரிடம் 'அவர் எங்கிருந்து வந்தாரோ அங்கு அவரை நாங்கள் திருப்பி அனுப்பி விட்டோம்.' என்று அதிகாரிகள் சொன்னதாக உஸ்மான் அகமதுவின் மகள் இல்மினூர் உஸ்மான் சி.என்.என்னிற்கு தெரிவித்தார்.

உஸ்மானிற்கு என்ன நடந்தது என்பதை குடும்பத்தால் உறுதிப்படுத்த முடியவில்லை. ஆனால் அவர் சின்ஜியாங் தடுப்பு முகாம்கள் ஒன்றில் காணப்பட்டதாக சின்ஜியாங்கில் உள்ளவர்களிடமிருந்து கேள்விப்பட்டதாக அவர்கள் கூறுகிறார்கள். இரண்டு வழக்குகள் குறித்த கருத்துக்காக சி.என்.என் சவுதி அரசாங்கத்தை அணுகியது, ஆனால் பதில் கிடைக்கவில்லை.

"சவுதி அரேபியா வெட்கப்பட வேண்டும். உய்குர்கள் யாத்திரை செய்ய வருவதை நீங்கள் விரும்பவில்லை என்றால், 'நாங்கள் உங்களை இங்கே விரும்பவில்லை' என்று சொல்லுங்கள். மக்கள் யாத்திரை செய்ய வரும்போது இதைச் செய்ய வேண்டாம்." என்று மனித உரிமை ஆர்வலர் அயூப் சி.என்.என்னிடம் தெரிவித்தார்.

அவரது தந்தை தடுத்து வைக்கப்பட்ட பின்னர் தான், மற்ற உய்குர்கள் சவூதி அரேபியாவில் கைது செய்யப்பட்டு, பலவந்தமாக சீனாவுக்குத் அனுப்பப்பட்டதை நூரிமன் கண்டுபிடித்தார். "எனக்குத் தெரிந்திருந்தால், நான் போக வேண்டாம் என்று அவரிடம் சொல்லியிருப்பேன்" என்று நூரிமன் கூறுகிறார்.

இந்த நிலைமை முஸ்லிம் உலகத்தின் தலைமை மீதான மோசமான குற்றச்சாட்டு என்று ஆர்வலர்கள் கூறுகின்றனர். "இந்த நாடுகள் இஸ்லாமிய உலகின் தலைவர்கள் என்று தங்களை பெருமையாக கூறிக் கொள்கின்றன. ஆனால் முஸ்லிம்களாக இருப்பதனாலேயே மக்களைத் துன்புறுத்தும் ஒரு நாட்டுக்கு முஸ்லிம்களை நாடுகடத்துவதைப் பற்றி இமைப் பொழுதும் யோசிக்க மாட்டார்கள்" என்று வாங் கூறுகிறார். "இது மிகவும் மூர்க்கத்தனமானது. பாசாங்குத்தனமானது. ஆனால் அது புவிசார் அரசியல் யதார்த்தத்தை விளக்குகிறது."

**வளர்ந்து வரும் சீன–துருக்கி உறவு**

பாரம்பரியமாக உய்குர் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பான இடங்களாகக் கருதப்படும் முஸ்லிம் நாடுகளில் கூட நிலைமை மாறுகிறது. கடந்த தசாப்தத்தில், ஆயிரக்கணக்கான உய்குர்கள் துருக்கியில் குடியேறியுள்ளனர், உய்குர் சுற்றுப்புறங்களும் பள்ளிகளும் நாட்டின் முக்கிய நகரங்களில் உருவாகியுள்ளன.

துருக்கியின் பெரும்பான்மையான மக்களுடன் ஒரு மதத்தைப் பகிர்ந்து கொள்வதோடு மட்டுமல்லாமல், உய்குர்கள் துருக்கிய இனக்குழுமத்தைச் சார்ந்தவர்கள். துருக்கியை ஒத்த மொழியைப் பேசுபவர்கள்.

ஆனால், ஒரு காலத்தில் உய்குர் உரிமைகளை வலியுறுத்திய துருக்கிய ஜனாதிபதி ரெசெப் தயிப் எர்டோவான், சமீபத்திய ஆண்டுகளில், சீனாவின் சின்ஜியாங் கொள்கை குறித்த தனது விமர்சனத்தை குறைத்துக் கொண்டுள்ளார். பெய்ஜிங்குடனான உறவை அதிகரிப்பதற்கான முயற்சியின் வெளிப்பாடே இது.

இந்த இரு நாடுகளுக்கிடையில் நாடுகடத்தல் ஒப்பந்தம் ஒன்று கடந்த ஆண்டு பிற்பகுதியில் சீனாவால் ஒப்புதல் அளிக்கப்பட்டு இருக்கிறது. அது இப்போது துருக்கியின் பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது. இது உய்குர்களின் அச்சத்தை அதிகரிக்கிறது.

துருக்கிய அதிகாரிகள் உய்குர்களினதும், துருக்கிய பொதுமக்களினதும் அச்சத்தை தணிக்க முயற்சிக்கின்றனர். உய்குர்களை மீண்டும் சீனாவுக்கு ஒப்படைக்க மாட்டோம் என்ற சொல்கிறார்கள். "இந்த சட்டமூலமூடாக உய்குர் துருக்கியர்களை துருக்கி சீனாவிடம் ஒப்படைக்கும் என்று அர்த்தப்படுத்துவது சரியல்ல" என்று துருக்கி வெளியுறவு மந்திரி மெவ்லட் கவ்சொக்லு கடந்த மார்கழி மாதத்தில் கூறினார். பெய்ஜிங் கடந்த காலங்களில் கோரிக்கைகளை விடுத்தது, ஆனால் துருக்கி அதற்கு இணங்கவில்லை என்றும் சொன்னார்.

ஆனால் ஒரு தாய் மற்றும் அவரது இரண்டு குழந்தைகள் உட்பட குறைந்தது நான்கு உய்குர்கள் கடந்த ஆண்டு துருக்கியால் தஜிகிஸ்தானுக்கு நாடு கடத்தப்பட்டதாக ஆர்வலர் அப்துவேலி அயூப் தெரி வித்துள்ளார். அவர்கள் இறுதியில் சீனாவுக்கு அனுப்பப்பட்டதற்கான சாட்சியங்கள் தெரிவிக் கின்றன என்று அவர் கூறுகிறார்.

கடந்த புரட்டாதியில், துருக்கியின் இடம் பெயர்வு மேலாண்மை இயக்குநரகம் துருக்கி உய் குர்களை சீனாவிடம் ஒப்படைத்ததை மறுத்தது. “நாங்கள் நேரடியாகவோ அல்லது மூன்றாம் நாடு களின் மூலமாகவோ எந்த உய்குர் துருக்கியர் களையும் சீனாவுக்கு நாடு கடத்தவில்லை. துருக்கி யிடம் இதுபோன்ற கொள்கை இல்லை. இனியும் இருக்காது” என்று இயக்குநரகம் எழுத்துப்பூர்வ அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆனால் இதுபோன்ற உத்தியோகபூர்வ அறிக் கைகள் உய்குர்களின் அச்சத்தை தணிக்க சிறிதள வும் உதவாது. இஸ்தான்புல்லில் உள்ள ஒரு சிறிய அடுக்குமாடி இருப்பிடம் மட்டுமே அமானிசாவின் 3 வயது மகள் அமினாவுக்கு இதுவரை தெரிந்த ஒரே வீடு. துருக்கியில் நடைபெறும் மாற்றங்களைப் பார்க்கும் போது முழு உலகுமே தன்னையும் தனது குழந்தைகளையும் பலியிடப் போவதாக அமானிசா அஞ்சுகிறார்.

அவள் இஸ்தான்புல்லுக்கு வந்த சில வாரங் களுக்குப் பிறகு, கடற்கரைக்குச் செல்லும் வழிகளைக் அங்குள்ளவரிடம் கேட்டாள். கடலை ரசிக்க தனது குழந்தைகளை அங்கு அழைத்துச் செல்ல விரும்பு வதாக அவள் சொன்னாள், ஆனால் அவளுடைய உண்மையான நோக்கங்கள் அவளுடைய விரக்தி யின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றன.

“நான் என் குழந்தைகளுடன் கடலுக்குள் செல்ல விரும்புகிறேன். எனக்கு நீந்தத் தெரியாது.” என்கிறார் அமானிசா. “இந்த உலகில் வாழ எனக்கு உரிமை இல்லை. மற்றவர்களைப் போல என்னை வாழ அனுமதிக்கும் அளவுக்கு இந்த உலகம் பெரிய தாக இல்லை.”

---

(12 ஆம் பக்க தொடர்ச்சி)

இலங்கையின் உச்ச சட்டத்தையும் அரசியல மைப்பையும் காவல்துறையினர் சமீபத்தில் மேலும் மேலும் மீறி வருகின்றனர். கடந்த ஆண்டு சித்திரை முதலாம் தேதி, அப்போதைய பொலிஸ் மா அதிபர் கொரோனா ஒடுக்குமுறை குறித்து விமர்சனம் செய்பவர்களை கைது செய்வதாக அறிவித்தார். ஆனால் இலங்கையின் மனித உரிமை கள் ஆணையத்தின் கடிதத்தைத் தொடர்ந்து அந்த உத்தரவு திரும்பப் பெறப்பட்டது. 08.06.2021 அன்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை சமூக ஊடகங்களில் தவறான தகவல்கள், புகைப்படங்கள் மற்றும் காணொலிகளை பரப்புவதை தடை செய்வதாக கூறினாலும் அது கோவிட் கட்டுப் பாட்டு திட்டத்தை விமர்சிப்பவர்களை தடை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அதன் நடவடிக்கைகளை நியாயப்படுத்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், இலங்கை தண்டனைச் சட்டம், 2007 இன் சிவில் மற்றும் அரசியல் உரிமை கள் சாசனம் மற்றும் 1927 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க கணினி குற்றச் சட்டம் ஆகியவற்றின் பல விதிகளை இது மேற்கோளிட்டுள்ளது. அதனை யடுத்து, சமூக ஊடகங்களில் அறிக்கைகளை வெளியிட்ட பலரையும் போலீசார் கைது செய்தனர்.

இப்போது இலங்கை காவல்துறை நீதி மன்ற உத்தரவுகள் மற்றும் சட்டத்திற்கு அப்பால் செயல்படுகிறது. இந்த நாடு இராணுவத்தின் பிடிக் குள் அகப்பட்டு வருவதையும், நாட்டின் பல முக்கிய நிறுவனங்களின் தலைவர்களாக காவல்துறையை சேர்ந்தவர்கள் சட்டவிரோதமாக நியமிக்கப்படுவதை யும் சொல்லத் தேவையில்லை.

ஊடக சுதந்திரத்தை நிராகரிக்கும் ஆட்சி யாளர்கள் குறித்து வெளியிடப்பட்ட சர்வதேச அறிக் கையில் சனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் பெயர் உட்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை காவல்துறை யின் காவலில் சந்தேக நபர்கள் கொல்லப்பட்டதும் சர்வதேச கவனத்தை ஈர்க்கிறது. இத்தகைய ஜனநாயக விரோத நடவடிக்கைகள் காரணமாக நாட்டிற்கு வழங்கப்பட்ட ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை கூட பாதிக்கப்படும் நிலைக்கு வந்துவிட்டது.

இலங்கை காவல்துறையின் சட்டத்திற்கு அப்பாற்பட்ட இந்த நடவடிக்கை, காவல்துறை யின் செயல்பாடு மட்டுமல்ல, இது கோத்தாவின் அடக்குமுறை உத்தரவின் வெளிப்பாடாகும். அடக்கு முறை ஆயுதத்துடன் நீண்ட காலத்திற்கு ஆட்சி செய்ய முடியும் என்று பல ஆட்சியாளர்கள் கருதினாலும், அவர்கள் வரலாற்றின் குப்பைத் தொட்டியில் மட்டுமே விழுந்துள்ளனர்.

# சீனாவை எப்படி எதிர்கொள்ள வேண்டும்?

அ.நிக்சன்
சிரேஷ்ட ஊடகவியலாளர்

சீனா வடக்கு கிழக்கிலே ஆதிக்கம் செலுத்துகின்றது. இலங்கையிலே ஆதிக்கம் செலுத்துகின்றது. இதனால் இந்தியாவுக்கு ஆபத்து, இந்திய தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து என்றெல்லாம் தமிழ்த் தேசியக் கட்சிகளினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக கருத்துக்களினை முன்வைக்கின்றார்கள்.

சீனாவினுடைய திட்டங்களை எதிர்க்கிறார்கள் என்பது ஒன்று. ஆனால் அமெரிக்க – இந்திய நலன்களுக்காக சீனாவை எதிர்க்கிறார்கள் என்பது இன்னொன்று என்பதனை நான் சொல்ல வேண்டியிருக்கிறது. சீனா இலங்கையில் ஆதிக்கம் செலுத்துகின்றது. அதிகளவு முதலீடு செய்கின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் வடக்கு – கிழக்கிலே தங்களுடைய ஆதிக்கத்தை செலுத்துகின்றார்கள் என்றால் பௌத்த தேசியவாத சிந்தனையோடு இங்கே வந்து ஆதிக்கம் செலுத்துகின்றார்களா என்பதனைப் பார்க்க வேண்டும். இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலோடு சீனா வடக்கு – கிழக்குக்கு வந்து ஆதிக்கம் செலுத்துமாக இருந்தால் அல்லது முதலீடு செய்யுமாக இருந்தால் அதனை எதிர்க்கத் தான் வேண்டும். அதற்கு வழிகள் இருக்கின்றன.

ஆனால், இந்திய தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து, அமெரிக்க நலனுக்கு ஆபத்து, இந்தோ – பசுபிக் பாதுகாப்பு பிரச்சினைக்கு ஆபத்து என தமிழ்த் தேசியக் கட்சிகளை சேர்ந்தவர்கள் எந்த வகையிலும் கருத்துகளை முன்வைக்க வேண்டிய அவசியம் இல்லை. அது அந்தந்த நாடுகள் பார்க்க வேண்டிய பிரச்சினை. ஈழத்தமிழ் மக்களுக்கு அதனால் என்ன பிரச்சினை? சீன முதலீடுகள் வடக்கு – கிழக்குக்கு வருகின்ற போது நாங்கள் எவ்வாறான நன்மைகளை பெற்றுக் கொள்ளலாம்? என்பதனைப் பார்க்க வேண்டும். ஏனென்றால் அமெரிக்கா உள்ளிட்ட உலகின் பெரும்பாலான நாடுகளுமே சீனாவுடன் வர்த்தக உடன்படிக்கைகளை செய்துள்ளன.

இந்தியாவுக்கும் – சீனாவுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகள் என்பது அதி உச்சமானது.



**“இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலோடு சீனா வடக்கு – கிழக்குக்கு வந்து ஆதிக்கம் செலுத்துமாக இருந்தால் அல்லது முதலீடு செய்யுமாக இருந்தால் அதனை எதிர்க்கத் தான் வேண்டும். அதற்கு வழிகள் இருக்கின்றன”**

2021 ஆம் ஆண்டு, மே மாதம் வரையிலான இந்திய – சீன வர்த்தகத்திலே $48.6 பில்லியன் வரையிலான முதலீடுகளும் இலாபங்களும் பெறப்பட்டிருக்கின்றன. ஆகவே இவற்றை எல்லாம் பார்க்கின்ற போது இந்திய – சீன வர்த்தக உடன்படிக்கை அதி உச்சத்தில் இருக்கின்றது. பீஜிங்கில் இருக்கின்ற இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையைப் பார்க்கின்ற போது 2021 ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான சீன – இந்திய வர்த்தக உறவு என்பது அமெரிக்காவையும் விட அதிகமாக அதாவது சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கையை விட அதிகமாக உள்ளது.

சீன கம்யூனிசக் கட்சியின் செய்தி தளமான குளோப் ரைம்ஸ் இந்திய –சீன வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பிலான புள்ளி விபரங்களை வெளியிட்டு இருக்கின்றது. ஆகவே அதிகளவிலான வர்த்தக நடவடிக்கைகளை அவர்கள் செய்கின்றார்கள். அரசியல் ரீதியாக அவர்களின் முரண்பாடு என்பது வேறு. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் எல்லையில் இருக்கின்ற பிரச்சினை என்பது வேறு. வர்த்தக நலன்களூடாக தங்களுடைய தேசத்தைக் கட்டியெழுப்புகின்ற விடயத்தில் இந்தியாவும் சீனாவும் கவனமாக இருக்கின்றன. அதே போன்று அமெரிக்காவும்

சீனாவும் கவனமாக இருக்கின்றன. அந்த அணுகுமுறையைத் தான் ஈழத்தமிழர்களும் செய்ய வேண்டும். எடுத்த எடுப்பிலே பூநகரியிலே கடலட்டைப் பண்ணை வருகிறது. திருகோணமலையிலே சீனா நிலத்தை வேண்டுகிறது என்று நாங்கள் பேசிக் கொண்டிருக்காமல் இந்தியாவுக்கு அதனால் ஆபத்து, அமெரிக்காவுக்கு ஆபத்து என சொல்லிக் கொண்டிருக்காமல் அதன் மூலம் எங்கள் தேசத்துக்கு என்ன ஆபத்து வருகின்றது என்பதனை உணர்ந்து மக்களுக்கு சொல்ல வேண்டும். அதே வேளை அதன் மூலமாக எங்களுடைய தேசத்துக்கு எம் மக்களுக்கு எவ்வாறான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் பார்க்க வேண்டும்.

பிலிப்பைன்ஸ், மியன்மார், கசகஸ்தான் போன்ற நாடுகளில் எல்லாம் சீனத் திட்டங்களுக்கு எதிராக பல்வேறு வகயான எதிர்ப்பு நடவடிக்கைகளை மக்கள் செய்கின்றார்கள். இந்தோனேசியாவில் சீனாவின் பொருளாதார திட்டங்களை மக்கள் கடுமையாக எதிர்க்கின்றார்கள். ஆனால் அதே வேளை சீனாவின் வர்த்தகப் பொருள்களையும் அவர்கள் கொள்வனவு செய்கின்றார்கள். தங்களுக்கு தேவையானவற்றைப் பெறுகின்றார்கள். பரிமாற்றிக் கொள்கின்றார்கள். ஆனால் ஆதிக்கம் தொடர்பிலான விடயங்களில் அவர்கள் கடுமையாக எதிர்க்கின்றார்கள். மங்கோலியர்களுக்கும் சீனாவுக்கும் இடையே பொருளாதார ரீதியாக பலத்த முரண்பாடு இருக்கின்றது.

இவ்வாறான அணுகுமுறைகளை நாங்கள் பார்க்க வேண்டும். அதன் மூலமாக ஈழத்தமிழ்மக்கள் தங்களுடைய அணுகுமுறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். சீனாவை எப்படி எதிர்கொள்வது என்பதை நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். வெறுமனே எடுத்த எடுப்பிலே நாங்கள் அமெரிக்காவுக்காகவும், இந்தியாவுக்காகவும் அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கக் கூடாது. அதன் மூலம் சீனாவோடு தேவையற்ற முரண்பாட்டையும் வளர்க்க வேண்டிய தேவை இல்லை. தமிழர்கள் இப்படித்தான் எடுத்ததற்கெல்லாம் எல்லாவற்றையும் எதிர்ப்பவர்கள் எனும் உணர்வு சீனாவுக்கும் வந்துவிடும். தேவையற்ற பகைமையை நாங்கள் தவிர்க்க வேண்டுமாக இருந்தால் நாங்கள் சரியான முறையில் அணுக வேண்டும்.

'இந்த பொருளாதார திட்டம் இப்படி எங்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டும். நீங்கள் பௌத்தவாத சிந்தனையோடு இங்கே வரக் கூடாது. சிங்கள அரசின் நிகழ்ச்சி நிரலோடு எங்கள் நிலங்களை அபகரிக்கக் கூடாது. சிங்கள அரசாங்கம் என்பது யாராக இருந்தாலும் வடக்கு கிழக்கு நிலங்களை அபகரிக்கிறார்கள். வடக்கு கிழக்கிலே புத்தர் சிலைகளை வைக்கிறார்கள். ஆக்கிரமிப்பு நோக்கமும், தமிழர்களின் மரபு வழி உரிமைகளை அழிகின்ற நோக்கத்தோடும் தான் ஆக்கிரமிப்பில் ஈடுபடுகின்றார்கள். ஆகவே அதனுடைய கூட்டுச் சக்தியாக சீனா வந்துவிடக் கூடாது. அதனை மெருகூடுகின்ற சக்தியாக சீனாவின் பொருளாதார திட்டங்கள் வடக்கு – கிழக்கில் வரக் கூடாது.' என்கிற கருத்துகளை நாங்கள் சொல்ல வேண்டும்.

**"சிங்கள அரசாங்கம் என்பது யாராக இருந்தாலும் வடக்கு கிழக்கு நிலங்களை அபகரிக்கிறார்கள். வடக்கு கிழக்கிலே புத்தர் சிலைகளை வைக்கிறார்கள். ஆக்கிரமிப்பு நோக்கமும், தமிழர்களின் மரபு வழி உரிமைகளை அழிகின்ற நோக்கத்தோடும் தான் ஆக்கிரமிப்பில் ஈடுபடுகின்றார்கள். ஆகவே அதனுடைய கூட்டுச் சக்தியாக சீனா வந்துவிடக் கூடாது. அதனை மெருகூடுகின்ற சக்தியாக சீனாவின் பொருளாதார திட்டங்கள் வடக்கு – கிழக்கில் வரக் கூடாது"**

அதை விடுத்து அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் ஆபத்து என்று கத்திக் கொண்டிருப்பது பயனற்றது. வெளிநாடுகளில் சீனத் திட்டங்களை எப்படி எதிர்க்கிறார்களோ அதே போன்ற நகர்வுகளைத் தான் நாங்கள் செய்ய வேண்டும். சீனாவுக்கு உள்ளேயே சீனாவுக்கு எதிர்ப்புகள் இருக்கின்றன. ஆகவே அந்த அணுகுமுறைகளை நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். எடுத்த எடுப்பிலே எதிர்ப்பு வசனங்களைப் பேசி பகைமையை சம்பாதித்துவிடக் கூடாது.




- கவிஞர் அஹ்நாப் ஜஸீம் -

# நானெப்படி கொண்டாட முடியும்?

பசுஞ்சோலை புற்றரை
நெடுஞ்சாலை மக்கள் படை
பூஞ்சோலை பறவைப்படை
அதிகாலை அழகிய வேளை
அந்தி மாலை அழகாய்
எரியும் சூரியச்சுவாலை

இது அவ்வளவு
கூடிவரப்பெற்று
கோடிமக்கள்
கூடிநின்று தக்பீர் சொன்னால்
கொண்டாடுவோம்

ஆயினும் அதுதான்
இல்லையே – சிரியாவில்
சிரித்து விளையாடும்
சிறார்களெல்லாம்
சீறிப்பாயும் தீக்கணையில்
சிதறிக்கிடக்கையிலே
நானெப்படி பெருநாள்
கொண்டாட முடியும்

ஆடை கறுப்பு
காட்டுவது வெறுப்பு
கொட்டுவது நெருப்பு
எடுத்தடிப்போம் அவர்களுக்கு செருப்பு
சகலதிற்கும் ஐ.எஸ்தான் பொறுப்பு
யாரிவர்களுக்கு கொடுப்பது மறுப்பு

பர்மாவிலே
தம்பியும் தங்கையும்
வெம்பி எரியும் பொழுதும்
விம்மி அழும்பொழுதும்
மம்மி போல் மரித்துக் கிடந்து விட்டு
மறுநாள் நானெப்படி
பெருநாள் கொண்டாடமுடியும்

மச்சியும் மாமியும்
மண்டை துளைத்து
மச்சம் வெளிவந்து
மயங்கிக் கிடக்கையிலே
நானெப்படி கொண்டாட முடியும்
பெரியப்பாவும் பெரியம்மாவும்
பெருங்கிடங்கில் பெற்றோல்
கொண்டு தீயில் துவண்டு கிடக்கையிலே – அதனை கண்டும்
காணாது உலகே நடக்கையிலே
நானெப்படிக்கொண்டாட முடியும்

பாலஸ்தீனிலே
கூப்பிட்டு வைத்த மரணம்
குவிந்து கிடக்கிறது தோட்டா படலம்
நாதியற்று நாறுகிறது நம்மவர் சடலம்
நம் நெஞ்சில் இல்லை ஒரு துளி சலனம்
இப்படியிருக்க நானெப்படி கொண்டாட முடியும்

நாமெல்லாம் எழிலில் எழுந்து நிற்கும்
அரேபியாவின் சுவைமிகு
பேரீச்சங்கனியும் வைத்து – இல்லாத உணவெல்லாம்
வைத்து இப்தார் திறக்கையிலே

அக்ஸாவிலே
தோட்டாவும் துப்பாக்கியும்
கல்லும் கவனும்
கையில் வைத்து இப்தார் திறக்கையிலே
நானெப்படி கொண்டாட முடியும்

இந்தியாவிலே
வெட்டிக்கூறு போடு இவர்களை என
கொட்டிமுழக்கும் பறையில்
தட்டிச்சொல்கிறான்
தரங்கெட்டவன்
தட்டிக்கேட்க திராணி இன்றி
நானெப்படி கொண்டாட முடியும்

அகிலம் எங்கும் ஆளவந்து
கருணை என்னவென சொல்லித்தந்து
சுவனத்திற்கு வழி சொல்லித்தந்த
அண்ணல் நபியின் மண்ணறையில்
குண்டுவெடிக்கையிலே நானெப்படி கொண்டாட முடியும்

வையகம் எங்கும்
சுகம் மங்க
பகை தங்க
நரகத்தீ பொங்குதே

ஆளுக்கொரு கை
அள்ளிக் கொடுப்போமா இரத்தம்
அப்பொழுதும் அடங்காதோ
இவ்யுத்தம்

நித்தம் யுத்தம்
ரத்தம் சத்தம்
இவ்வத்தனையும் துடைத்தெறிந்துவிட்டு
யுத்தமிலா புத்தம்புது உலகு படைத்துவிட்டு பின்னர்
புத்தாடை புனைந்து கொண்டாடினால்
நானும் கொண்டாடுவேன்....

கவிஞர் அஹ்நாப் ஜஸீம் 13 மாதங்களுக்கு மேலாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் வைக்கப் பட்டுள்ளார். அவர் கவிதைகளில் ஐ.எஸ் பற்றி எழுதி தீவிரவாதத்தைத் தூண்டினார் என்று அவர் மீது வழக்கு சோடிக்கப்படுகிறது. மேலுள்ள கவிதை ஓர் உதாரணம்.

# வாசிப்பு பண்பாட்டை கட்டியெழுப்பவது எப்படி? ஒரு குறிப்பு



தெ. மதுசூதனன்
ஆசிரியம் – பிரதம ஆசிரியர்

தமிழர் போன்ற தொன்மையான சமூகத்துக்கு எழுத்தறிவு, வாசிப்பு என்பன நவீன கல்விக்கூடாக பரவலாக்கப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. ஆனால், நல்ல தரமான புத்தகங்களை அல்லது அறிவுருவாக்கப் புத்தகங்களை தேடி வாசிக்கும் வீதம் தான் இப்பொழுது குறைந்து கொண்டிருக்கின்றது.

கல்வி என்பது ஒரு விதத்தில் குறிப்புக்களில் தங்கியிருப்பதாக மாறி வருகிறது. விரிவுரைக் குறிப்புகள் அல்லது ஆசிரியரின் குறிப்புகளில் தங்கியிருப்பதும் அந்தக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு பரீட்சைகளை நடாத்துவதும் அந்தக் குறிப்புகளையே வைத்து பரீட்சை எழுதி அதி புள்ளி பெறுகின்ற மாணவ சமுதாயத்தை உருவாக்கவும் தொடங்கி விட்டோம்.

பல்கலைக்கழகத்தில் இருந்து பாடசாலை வரை இந்த நிலை உள்ளது. கடந்த 30 வருடங்களாகப் பார்த்தால் இந்தப் பண்பாட்டுக்குள்ளால் வந்தவர்கள் தான் இன்றைக்கு ஆசிரியர்களாக கல்வி நிர்வாகிகளாக இருக்கிறார்கள். ஒரு சமூகம் சார்ந்து, வீடு சார்ந்து பண்பாடு வளர்ந்திருந்தால் அல்லது வளர்க்கப்பட்டிருந்தால் தான் வாசிப்பு சூழல் வளரக்கூடிய நிலை இருந்து இருக்கும்.

இலங்கையில் ஐப்பசி மாதம் என்றால் தேசிய வாசிப்பு மாதம். ஆண்டுத்திவசம் செய்கிற மாதிரி பாடசாலைகளில் 'வாசிப்பின் முக்கியத்துவம்', 'வாசிப்பதால் மனிதன் பூரணத்துவமாகின்றான்' இப்படி கிளிப்பிள்ளை மாதிரி தேய்ந்த சொற்களை சொல்லிக் கொண்டு சம்பிரதாயமாக இந்த மாதம் முடிகிறது. பட்டிமன்றக் கலாசாரம் எங்களிடம் ஓங்கி விட்டது. பட்டிமன்றக் கலாச்சாரமும் காட்சி ஊடகமும், கூர்மையான நுண்ணிய வாசிப்புக்களில் இருந்து எங்களை திசை திருப்புகின்றன. இன்று ஒரு நல்ல பட்டிமன்றப் பேச்சாளர் தான் நல்ல அறிவாளி என்கிற நிலை உள்ளது.

முன்னர் நல்ல புத்தகங்களை தேடிப் படிக்கின்ற, துறை சார்ந்தவர்களை சந்தித்து கற்கின்ற முறைமை இருந்தது. மர நிழலில் குறிப்பிட்ட ஒரு நூலைப் பற்றி நாட்கணக்கில் அக்கு வேறு ஆணி வேறாக படித்து கலந்துரையாடுவர். தொல்காப்பியம் பற்றி குமாரசாமி புலவர், கணேசய்யரிடம் வீடு தேடி சென்று படித்தாராம். அது ஒரு காலம். அவர் என்ன நூலை படிக்கச் சொல்கிறாரோ கற்க போகிறவர் அவை அனைத்தையும் வாசித்து விட்டுத் தான் போவார். அங்கே பாடம் எனப்படுவது, வாசிப்பு, சிந்தனைகளை பகிர்ந்து கொள்வது, கருத்துகளை பகிர்ந்து கொள்வது என்பதாக இருந்தது. மரபுவழிக் கல்வியில் கூட நல்ல ஞானம் இருந்தது.

ஆனால் இன்று ஒரு பட்டிமன்றப் பேச்சாளரிடம் கேளுங்கள், தொல்காப்பியத்தில் என்ன மாதிரியான ஆய்வு நூல்கள் வெளிவந்திருக்கின்றன என்று. சமூகவியல் பிரச்சினைகளை தீர்க்கும் இரு நூல்களை உதாரணம் காட்டி அந்த நூலை வாசிக்கத் தூண்டுகின்ற வகையில் அந்தப் பேச்சை அமைத்துக் கொள்ள முடியும் அல்லவா? அப்படி பேச்சை அமைத்துக் கொள்வதால் வாசிப்பை நோக்கி தூண்ட முடியுமல்லவா? இதனை செய்கின்றோமா? இல்லையே.

நாங்கள் வாசிப்பில் குறைவு என்று சொல்ல தெரிகிறது. வாசிப்பில் இருந்து மீட்டெடுப்பதற்கு அதனை வளப்படுத்துவதற்கு அதனை ஆழப்படுத்துவதற்கு நாங்கள் முன்மாதிரியாக இயங்குகின்ற தேவை ஒவ்வொரு நபருக்கும் உண்டு. அதுவும் குறிப்பாக சமூகம் சார்ந்து சிந்திப்பவர்கள், அது பட்டிமன்றப் பேச்சாளராக இருக்கலாம், ஊடகத் துறையை சேர்ந்தவராக இருக்கலாம், ஆசிரியராக இருக்கலாம் எவராக இருந்தாலும் முன்மாதிரியாக இயங்க வேண்டும்.

வகுப்பறைக்குள் ஒரு ஆசிரியர் நுழைகின்ற போது நல்ல புத்தகங்களை அவர் கொண்டு போக வேண்டும். மாணவன் பார்க்கக் கூடிய மாதிரி அதனை வைக்க வேண்டும். இடைக்கிடை அதிலிருந்து இரண்டு மேற்கோளை சொல்ல வேண்டும். மாணவர்கள் இரகசியமாக வந்து புத்தகங்களை எட்டிப் பார்க்க வேண்டும். இப்படி வாசிப்பை தூண்டுவதற்கு பல நுட்பங்களைக் கையாள வேண்டும். அப்போது தான் மாணவர்களின் வாசிப்பு செழிப்படையும்.

(உரையாடல் தொடரும்)

# ஆடிக் கரிநாள்



தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் மீது சிங்கள பேரினவாத அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டு இனப்படுகொலை நடந்து 38 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் அதன் நினைவுகள் தமிழர்களின் நெஞ்சங்களில் ஆறாத துயரமாய் இன்றும் உள்ளன.

இலங்கைத்தீவில் இருந்த இனப்பிரச்சனை தொடர்பாக உலகம் கவனத்திற் கொள்ளாத காலம் அது. பௌத்த சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களால், தமிழ் இனத்திற்கு எதிராக திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட கொடூரமான காட்டுமிராண்டித்தனமான இனச்சங்காரமே 83 ஆடிக் கலவரம். இதில் ஆயிரக் கணக்கான தமிழர்கள் பலியாக்கப்பட்டனர்.

தமிழர்களின் வளங்களை, செல்வங்களை, சொத்துக்களை, சிங்களக் காடையர்கள் கொள்ளையிட்டனர். தீ வைத்து மகிழ்ந்தனர். தமிழ்மக்களின் பொருளாதார வளம் முற்றாக அழிக்கப்பட்டது. வெலிக்கடைச் சிறையில் சிறைவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் ஐம்பத்திமூன்று பேர், சிறைச்சாலைக்குள் வைத்து இரண்டு கட்டங்களாக, மிருகத்தனமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டு, படுகொலை செய்யப்பட்டனர்.

சொத்துக்களையும் சொந்தங்களையும் இழந்து, தென்பகுதியில் இருந்தும், மலையகப் பகுதிகளில் இருந்தும் தமிழர்கள், தமது தாயகம் நோக்கி அகதிகளாக விரட்டப்பட்டனர்.

காலங்காலமாக தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான கலவரங்களை நிறுத்த முடியாமல் சர்வதேச சமூகம் பொறுப்பற்று இருந்தது. அந்த நிலையைப் பயன்படுத்தி சிங்களப் பேரினவாத அரசு கலவரத்தை பன்மடங்கு கொடூரமான யுத்தமாக தொடர்ந்தது. அதன் விளைவை எம்மினம் முள்ளிவாய்க்காலில் அனுபவிக்க நேர்ந்தது.

ஆடிக் கரிநாளுடன் சிங்களப் பேரினவாதக் கொடுமைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளியை சர்வதேச சமூகம் இட்டிருந்தால், தமிழர்களுக்கு எதிரான கட்டற்ற வெறித்தனத்தை சிங்களம் முள்ளிவாய்க்கால் வரை தொடர்ந்திருக்காது. இன்று சிங்கள அரசு, தனது திட்டத்தின் அடுத்த கட்டம் நோக்கி நகர ஆரம்பித்திருக்கின்றது.

தமிழர் தாயகத்தை முற்றாக ஆக்கிரமித்து, தமிழ் இனத்தை முற்றாக, சிங்களத்துள் கரைய வைக்கின்ற திட்டத்துடன் அது தனது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. இராணுவ முற்றுகைக்குள் தமிழர் தாயகத்தை வைத்தபடி, தமிழ் மக்களின் மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்களில் கை வைத்துள்ளது சிங்கள அரசு. பௌத்த மதத்திணிப்பை தீவிரமாய் மேற்கொண்டுள்ளது. சிங்களக் குடியேற்றங்களைத் தாராளமாய் மேற்கொண்டு வருகின்றது.

மறுபுறத்தில், தமிழ் மக்களின் பொருளாதாரம் திட்டமிடப்பட்டு சூறையாடப்படுகிறது. தமிழர் காணிகளில் இராணுவம் விவசாயம் செய்கிறது. தொழிற்சாலைகளை நடத்துகிறது. கடல்வளத்தை கொள்ளையடிக்கிறது. சிங்கள நிதி நிறுவனங்கள் நுண்கடன் என்ற போர்வையில் போரினால் வாழ்வாதாரத்தை இழந்த மக்களை மேலும் கீழே தள்ளுகின்றன. இவை எல்லாம் திட்டமிட்ட இனவழிப்பின் அங்கங்கள்.

இந்த இனவழிப்பைத் தீவிரமாக்கிய ஒரு திருப்பு முனையே 83 ஆடிக் கலவரம். அந்தவகையில் ஈழத்தமிழர் வரலாற்றில் ஆடிக்கலவரத்தின் முக்கியத்துவத்தை நாம் மறக்கலாகாது. இனிவரும் சந்ததிகளுக்கு அந்த வரலாற்றைக் கடத்துவது நமது கடமை. தனது வரலாற்றை மறந்த இனம் இறுதியில் அழிந்து போகும்.

தமிழ்மக்கள் மீதான திட்டமிட்ட இனஅழிப்பு சர்வதேச சமூகத்தால், இயல்பாகத் தட்டிக்கேட்கப்பட மாட்டாது என்பதும், தடுத்து நிறுத்தப்படமாட்டாது என்பதும் கசப்பான வரலாற்று உண்மை. சர்வதேச சமூகத்தை எம்பால் திரும்பிப் பார்க்க வைப்பதற்கு ஓர் ஒன்றிணைந்த தேசியக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தமிழ் மக்களின் தலையாய கடமையாகும். இந்தக் கட்டமைப்பில் ஈழத்தமிழர்கள், மலையகத் தமிழர்கள், தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் தலைமை வகிக்க வேண்டும். புலம்பெயர் தமிழர்கள், மற்றும் தமிழ்நாட்டுத் தமிழர்கள் இந்தக் கட்டமைப்புக்கு வலு சேர்க்க வேண்டும்.

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 27.07.2021 அன்று வெளியிடப்பட்டது.